பதினெண் கீழ்க்கணக்கு

பெருவாயின் முள்ளியார்

இயற்றிய

# ஆசாரக் கோவை

EDITED BY

T CHELVAKESAVAROYA MUDALIAR, M A,

PACHAIYAPPA'S COLLEGE, MADRAS.

**THIRD EDITION**

MADRAS.

Kalaratnakaram Press.

1916

*Registered.* விலை அணா. 8.

4530a
0.1 B III
E6

# Prefatory Note

"There is a great mass of noble writing ready to hand in Tamil and Telugu folk-literature, especially in the former. To raise these books in public estimation, to exhibit the true products of the Dravidian mind, would be a task worthy of the ripest scholar and the most enlightened government. I would especially draw attention to the Eighteen Books that are said to have received the sanction of the Madura College, and are among the oldest specimens of Dravidian literature. Any student of Dravidian writings would be able to add a score of equally valuable books. If these were carefully edited, they would form a body of Dravidian classics of the highest value." Thus wrote Mr Charles E. Gover, member of the Royal Asiatic Society, in his introduction to the Folk-Songs of Southern India, printed in 1871. His desire was to a great extent accomplished by veterans like Arumuka Navalar, Damodaram Pillai, and Swaminadaiyar (Mahamahopadhyaya). The Mahamahopadhyaya rescued in time most of the "score of equally valuable books" condemned to oblivion in private and public libraries in Southern India. These publications have helped Archaeologists and Epigraphists in making many discoveries, and Historians in deter-

mining their perspective. Two more of those "valuable books" குறுந்தொகை snd நற்றிணை have recently been published by other scholars, Very few yet remain to be published.

Of the Eighteen Books only about half a dozen have been edited by scholars of repute. Some, very badly printed long ago, are now not available. Two or three have not yet been printed. One of them was a puzzle to the Tamil world for a whole century. Sriman Swornam Pillai of the Tinnevelly Hindu College deserves all credit for reclaiming it from Lethe It is a copy made by (திருமேனி இரத்தின கவிராயர்) Tirumeni Ratna Kaviroyar, author of Maran Alankaram, a Tamil scholar of vast erudition, who lived in the eighteenth century. This book is (இன்னிலை) Innilai by (பொய்கையார்) Poikaiyar, author of Kalavali Narpadu. This will, it is hoped, come out ere long.

Acharakkovai, one of the Eighteen Books, was first published by Tıllaiyambur Chandrasekara Kaviroyar with the old commentary in 1857 ~~A. D.~~ I issued two editions, one in 1893, and the other in 1898. I now issue a third edition, adding only a few notes here and there.

**Perambur, Madras**<br>**15. Feb. 1916.**

**T. C.**

# ஆசாரக்கோவை.

## பதிப்புரை.

முற்காலங்களில் பாண்டியர்களால் ஏற்பட்ட தமிழ்ச் சங்கங்கள் மூன்று. அவை தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்பன. தலைச்சங்கமும் இடைச்சங்கமும் சரிதக்காலத்துக்கு முற்பட்டவை. கடைச்சங்கம் ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த தென்பது இக்காலப் புலவரில் பலருடைய கொள்கை. கடைச்சங்கம் இருந்த இடம் மதுரை. அச்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர் சிறுமேதாவியர், சேந்தம்பூதனார், அறிவுடையானார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரர் முதலானவர். அவருள்ளிட்டுப் பலர் பாடினர். அவர்கள் பாடியன கூத்தும் வரியும் பேரிசையும் சிற்றிசையும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண் கீழ்க்கணக்கும் என்றித்தொடக்கத்தன. இவற்றில் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் மேற்கணக்கின்பாற்படும்.

ஆசாரக்கோவை கடைச்சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்று: பெருவாயின் முள்ளியார் இயற்றியது: தற்சிறப்புப்பாயிரம் நீங்கலாக, நூறு வெண்பாக்களை உடையது. குறள்வெண்பா - சிந்தி

யல்வெண்பா - நேரிசைவெண்பா-இன்னிசை வெண்பா - பஃறொடைவெண்பா - சவலைவெண்பா என்கிற வெண்பாவின் வகையெல்லாம் இந்நூலில் உண்டு. நூல் இயற்றினவர் சைவரென்பது தற்சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். இந்நூலின் பாக்கள், பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி முதலிய இலக்கியங்களின் உரைகளிலும், இலக்கண விளக்கம் நன்னூல் பிரயோக விவேகம் முதலான இலக்கணங்களின் உரைகளிலும், மேற்கோள்களாக வருகின்றன.

இந்நூலுக்கு ஆதாரம் ஆரிடம் என்பது தற்சிறப்புப் பாயிரத்தில் குறித்திருக்கின்றது. இலக்கண விளக்கவாசிரியர் வழிநூலை விளக்கும் சூத்திரவுரையில் மொழிபெயர்ப்பு நூலுக்கு ஆசாரக்கோவையை உதாரணம் காட்டியிருக்கிறார். இந்நூலிற் கூறிய ஆசாரங்கள் பெரும்பான்மையாய் வடமொழியிலுள்ள சுக்ரஸ்ம்ருதியிலிருந்து தொகுத்தவை என வடநூற் புலவர் கூறுகின்றனர். மன்னரைச் சேர்ந்தொழுகும் ஆசாரங்கள், தௌமியர் பாண்டவர்க் குபதேசித்தவற்றை ஒட்டியிருப்பனவாகக் காண்கின்றன. முதலிய பொருளால் இந்நூல் ஆசாரக்கோவை எனப் பெயர்பெற்றது. இது ஆசாரங்களது கோவை அல்லது ஆசாரங்களைக் கோத்த கோவை என விரியும்.

இந்நூலில் உண்ணல் உடுத்தல் உறங்கல் நீராடல் காலக்கடன் ஐங்குரவரை வழிபடல் இல்லொழுக்கம் மன்னரைச்சேர்ந்தொழுகல் முதலியன பத்தழகுடனே பண்புறக் கூறியிருக்கின்றன.

இந்நூலுக்குப் பழையவுரை ஒன்றுண்டு. அது பொழிப்புரை. அவ்வுரை ஒருவாறு கண்ணழிவு

செய்து உள்ளபடியே பதிப்பித்திருக்கிறது. ஒவ்வொரு பாவிலும் உரைத்துள்ள ஆசாரங்கள் கண்ணழிவின் கீழே எளிய தமிழில் எழுதிச் சேர்ந்திருக்கின்றன. பற்பல ஆசாரங்களின் ஸம்ப்ரதாயங்களை இக்காலத் தறிவது கூடாமையால், பிழைபட்ட இடங்களை ஆன்றோர் பிழைதபுத்துக்கோடல் வேண்டும். பாக்களை இழவாமல் பாதுகாப்ப தொன்றுமே இந்நூலினை அச்சிட்ட நோக்கம். ஒரோவிடத்துப் பாடபேதமும் சில குறிப்புக்களும் காட்டியிருகின்றன. பழையவுரைக்கு மாறான புதுச்சரக்கு ஒன்றும் கலந்திராது.

இந்நூல் முதன்முதல் கி. பி. 1857ஆ திருத்தணிகைவிசாகப்பெருமாளையர் முன்னிலையில் தில்லையம்பூர்-சந்திரசேகர கவிராஜபண்டிதரால் இலட்சுமீ விலாச அச்சுகூடத்தில் பிரசுரமாயிற்று. அதை ஒட்டி 1893ஆ பி-டி-வி-செங்கல்வராய நாயகருடைய ஆர்பனேஜ அச்சுக்கூடத்தில் ஒரு பதிப்பும், அப்பால் உரிய திருத்தங்களோடு 1898ஆ மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில் ஒரு பதிப்பும் பிரசுரமாயின. சில காலத்துக்குமுன் பிரதிகள் செலவாகிவிட்டமையால் இப்பதிப்பு

தி. செ.

15-2-1916
பிரம்பூர், சென்னை.

# பதினெண் கீழ்க்கணக்கு விளக்கம்.

**பதினேண் கீழ்க்கணக்கு**

"வனப்பிய றானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவலோ
டம்மை தானே அடிநிமிர் பின்றே"

என்னும் தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல் 236 - சூத்திரத்தின் உரையில், "சில்வாக என்பது எண்ணுச் சுருங்குதல். மெல்லியவாய்ச் சில வாய சொற்கள், எழுத்தினன் அகன்று காட்டாது சிலவெழுத்தினன் வருவது. அடிநிமிராதென்றது ஐந் தடியின் ஏறாதென்றவாறு. தாயபனுவலோ டென்றது,—இலக்கணஞ்சொல்ல எடுத்துக்கொண்ட அறம் பொருள் இன்பமென்னும் மூன்று மன்றியும் வேறு இடையீட்டதாய்ச் செல்வது என்றவாறு. அஃதா வது பதினேண் கீழ்க்கணக்கு எனவுணர்க. அதனுள் இரண்டடியானும் ஐந்தடியானும் ஓரோ செய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம் பொரு ளின்பமென அவற்றுக்கு இலக்கணங்கூறிய பாட்டுப் பயின்றுவருமாறும், கார் நாற்பது களவழி நாற்பது முதலாயின வந்தவாறும் கண்டுகொள்க" என்பது உரைத்திருக்கின்றது.

“ அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
அறம்பொரு ளின்பம் அடுக்கி அவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும் ”

(பன்னிருபாட்டியல்)

நான்மணிக்கடிகை

நாற்பது

கால மிடம்பொருள் கருதி நாற்பான்
சால வுரைத்தல் நாறும் பதுவே.

(இ - ள்.) காலமும் இடமும் பொருளும்பற்றி நாற்பது வெண்பாப் பொருந்த வுரைத்தல் நாற்பதாம்.

காலம்பற்றி வருவது கார்நாற்பது. இடம்பற்றி வருவது களவழிநாற்பது. பொருள்பற்றி வருவன இன்னாநாற்பது இனியவைநாற்பது. இன்னலாக்குதலே இன்னாவென்றும் இனிமையாக்குதலே இனியவை யென்றுங்கூறினர்.(இலக்கண விளக்கம் பாட்டியல்-91-சூ).

ஐந்திணைச்செய்யுள்

உரிப்பொரு டோன்ற ஓரைந் திணையும்
தெரிப்ப தைந்திணைச் செய்யு ளாகும்.

(இ - ள்.) புணர்தல் முதலிய ஐந்து ஒழுக்கமும் விளக்கும் குறிஞ்சி முதலிய ஐந்து திணையினையும் தெரித்துக் கூறுவது ஐந்திணைச்செய்யுளாம். (இலக்கண விளக்கம் - பாட்டியல் - 89 - சூ.)

முதுமொழிக்காஞ்சி

பலர்புகழ் புலவர் பன்னின தெரியும்
உலகியல் பொருண்முடி புணரக்கூ றின்று.

(இ - ள்.) எல்லாரும் கொண்டாடும் அறிவுடையோர் குற்றம்நீக்கி ஆராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம்பொரு ளின்பத்தை அறியச் சொல்லியது. (புறப்பொருள்வெண்பாமாலை-பொதுவியற் படலம் - காஞ்சிப்பொதுவியற்பால-1)

ஏதமி லறமுதல் இயல்பிவை யென்னும்
மூதுரை பொருந்திய முதுமொழிக் காஞ்சி.
(இலக்கணவிளக்கம் - 619 - சூ.)

கழிந்தோர் ஏனை ஒழிந்தோர்களுக் காட்டிய
முறைமையாகும் முதுமொழிக்காஞ்சி.
(திவாகரம் - ஒலிபற்றிய பெயர்த்தொகுதி - 126.)

காஞ்சியின் பொதுவிலக்கணமாவது

பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.
(தொல் - புறத்திணை - 23 - சூ.)

# பதினெண் கீழ்க்கணக்கு

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுடன் ஏலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.

1. நாலடியார் - ஜைனமுனிவர்கள் இயற்றிய நானூறு வெண்பாக்களை யுடையது. பதுமனார் என்பவர் இவைகளை முப்பாலாய் நாற்பது அதிகாரங்களாகப் பகுத்து உரையும் இயற்றினர். கடவுள் வாழ்த்தும் அவரே இயற்றியதென்பர்.

2. நான்மணிக்கடிகை - விளம்பிநாகனார் இயற்றியது. கடவுள் வாழ்த்துட்பட நூற்றொரு வெண்பாக்களை யுடையது. ஒவ்வொன்றும் நந்நான்கு பொருளைக் கூறும்.

3. இனியவை நாற்பது - மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் இயற்றியது. இன்ன தின்னது இனிதென்றுரைக்கும் நாற்பது வெண்பாக்களை யுடையது.

4. இன்னா நாற்பது - கபிலர் இயற்றியது. இன்ன தின்னது துன்பந்தரும் என்றுரைக்கும் நாற்பது வெண்பாக்களை யுடையது.

5. கார்நாற்பது-மதுரைக் கண்ணங் கூத்தனார் இயற்றியது. கார்காலத்து வருவேனென்று வினைமேல் சென்ற தலைவன் வாராமையின் தலைவி பிரிவாற்றாமல் வருந்துவதைக் கூறும் நாற்பது வெண்பாக்களை யுடையது.

6. களவழிநாற்பது - பொய்கையார் இயற்றியது. போர்செய்து தோல்வியடைந்த கணைக்காலிரும் பொறையைப் பற்றிப்போய்ச் சோழன் செங்கணான் சிறையி லிட்டபோது பொய்கையார் களம்பாடி வீடுகொண்டார். இந் நூலின் பொருள், மேற்படி போர்க்கள வர்ணனை. அங்கங்கே காட்டியிருக்கும் உவமைகள் நிரம்ப அழகானவை.

7. ஐந்திணையைம்பது-மாறன்பொறையனார் இயற்றியது. ஒவ்வோர் அகப்பொருட்டிணைக்கும் பப்பத்தாகப் பாடிய ஐம்பது வெண்பாக்களை யுடையது.

8. திணைமொழியைம்பது - சாத்தந்தையார் மகனார் கண்ணஞ்சேந்தனார் இயற்றியது. ஒவ்வோர் அகப்பொருட்டிணைக்கும் பப்பத்தாகப் பாடிய ஐம்பது வெண்பாக்களை யுடையது.

9. ஐந்திணை யெழுபது-மூவாதியார் இயற்றியது. அகப்பொருளைந்திணைக்கும் பதினன்கு பதினன்காகப் பாடிய எழுபதுவெண்பாக்களையுடையது.

10. திணைமாலை நூற்றைம்பது - மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணக்கர் கணிமேதாவி

யர் இயற்றியது. அகப்பொருளைந்திணைக்கும் முப்பது முப்பதாகப் பாடிய நூற்றைம்பது வெண்பாக்களை யுடையது.

11. முப்பால் - திருக்குறள் (திருவள்ளுவப்பயன்) - திருவள்ளுவ நாயனார் இயற்றியது. அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பாலாய், நூற்று முப்பத்துமூன்று அதிகாரங்களாய், ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறள் வெண்பாக்களை யுடையது. பரிமேலழகர் உரை பயில வழங்குகின்றது. இந் நூலின் பெருமையை உணர்த்துவது, திருவள்ளுவமாலை.

12. திரிகடுகம் - நல்லாதனார் இயற்றியது. மும்மூன்று பொருள்களை விளக்கும் வெண்பாக்கள் (கடவுள் வாழ்த்துட்பட) நூற்றொன்றுடையது. திருக்கோட்டியூர் இராமாநுசாசாரியர் உரை பயில வழங்குகின்றது.

13. ஆசாரக்கோவை - பெருவாயின்முள்ளியார் இயற்றியது. இருடிகள் சொல்லிய ஆசாரங்களைக் கோத்துரைக்கும் பலவகை வெண்பாக்கள் (தற்சிறப்புப்பாயிர முட்பட) நூற்றொன்றுடையது.

14. பழமொழி-முன்றுறையரையனார் (ஜைனர்) இயற்றியது. ஒவ்வொரு பழமொழியை இறுதியில் பெற்ற நானூறு வெண்பாக்களை யுடையது.

15. சிறுபஞ்சமூலம் - காரியாசான் (ஜைனர்) இயற்றியது. ஐவைந்து நீதிகளைக் கூறும் தொண்ணூற்றெட்டு வெண்பாக்களை யுடையது.

16. இன்னிலை - பொய்கையார் பாடியது. மதுரையாசிரியர் பூதனூர் தொகுத்தது. கடவுள் வாழ்த்து பாரதம் பாடிய பெருந்தேவனூர் இயற்றியது. அறப்பால் பத்தும் பொருட்பால் ஒன்பதும் இன்பப்பால் பன்னிரண்டும் வீட்டிலக்கப்பால் பதினொன்றும் ஆகிய நாற்பத்தைந்து வெண்பாக்களை யுடையது.

17. முதுமொழிக்காஞ்சி - மதுரை கூடலூர்க்கிழார் இயற்றியது. பத்ததிகாரமாய் ஒவ்வோரதிகாரமும் பப்பத்துக் குறட்டாழிசையால் அமைந்தது. ஒவ்வோரடியும் ஒவ்வொரு முதுமொழி (தொல் - பொருள் - 490)

18. ஏலாதி - தமிழாசிரியர் மகனூர் மாக்காயனூர் மாணாக்கர் கணிமேதாவியர் (ஜைனர்) இயற்றியது. அவ்வாறு பொருளுரைக்கும் வெண்பாக்கள் (கடவுள்வாழ்த்து நீங்கலாக) எண்பதுடையது.

# ஆசாரக் கோவை.

## தற்சிறப்புப்பாயிரம்.

ஆரெயில் மூன்று மழித்தான் அடியேத்தி,
ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையான், ஆசாரம்
யாரும் அறிய, அறனாய மற்றவற்றை
ஆசாரக் கோவை எனத்தொகுத்தான்; தீராத்
திருவாயி லாய திறல்வண் கயத்தூர்ப
பெருவாயின் முள்ளியென் பான்.

(இ - ள்.) ஆரெயில் மூன்றும் அழித்தான் அடியேத்தி - பகைவர்கள் அழித்தற்கரிய மும்மதிலேயும் நகைத்தழித்த முதல்வன் அடியைத் துதித்து, ஆரிடத்து தான் அறிந்த மாத்திரையான் - இருடிகள் சொல்லிய நூலகளில் தான் அறிந்த அளவினாலே, யாரும் அறிய - எல்லாரும் அறிய, அறனாய ஆசாரம் மற்றவற்றை - அறனுள்ள ஆசாரமாகிய மற்றவற்றை, ஆசாரக்கோவை என தொகுத்தான் - ஆசாரக்கோவை எனச்செய்து திரட்டினான்; தீரா திரு வாயிலாய திறல் - நீங்காத திருமடந்தைக்கு வாயிலாய திறலே யுடைய, வண் கயத்தூர் - வண்கயத்தூர், பெருவாயில் முள்ளி என்பான்-பெருவாயின் மகனாகிய முள்ளி

என்னும் பெயரையுடையான். [ 'வெண்கயத்தூர்' என்றும் பாடம் ].

இலக்குமிவிலாசம் பொருந்திய வண்கயத்தூரில் வாழும் பெருவாயின் முள்ளியென்பவர், சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, மிருதிகளில் எல்லாரும் அறியத்தக்க சதாசாரங்களை ஒன்றாகத் திரட்டி, ஆசாரக்கோவை என்னும் இந்நூலை அருளிச்செய்தார்.

ஆரிடம்-ஆர்ஷம்-ரிஷி சம்பந்தமானது-இருடிகள் நூல்.

# ஆசாரக் கோவை.

## ஆசாரங்களுக்குக் காரணம்.

1. நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொலோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து.

(இ - ள்.) நன்றியறிதல் - தனக்குப் பிறர் செய்த நன்றி யறிதலும், பொறையுடைமை - பொறையும், இன்சொலோடு - இன்சொல்லும், எ உயிர்க்கும் இன்னாத செய்யாமை - எல்லா உயிர்க்கும் இன்னாதன செய்யாமையும், கல்வியோடு - கல்வியும், ஒப்புரவு ஆற்ற அறிதல் - ஒப்புரவை, மிக அறிதலும், அறிவுடைமை - அறிவுடைமையும், நல்லினத்தாரோடு நட்டல் - நல்லினத்தாரோடு நட்டலும், இவை எட்டும் - என இவ்வெட்டு வகையும், சொல்லிய ஆசார வித்து - நல்லாரால் சொல்லப்பட்ட ஆசாரங்கட்குக் காரணம்.

சதாசாரங்களுக்குக் காரணம் :—செய்ந்நன்றியறிதல் - பொறுமை - இனியவார்த்தை - எந்த உயிருக்கும் தீங்கு செய்யாமை - கல்வி - ஒப்புரவறிதல் - அறிவுடைமை - நல்ல சிநேகம் என்னும் எட்டுமாம்.

ஒப்புரவறிதல்-உலக நடையை அறிந்து செய்தல். திருக்குறளில் 'ஒத்த தறிவான்' (- உலக நடையினை அறிந்து செய்பவன்) என்றும், 'செயுநீர' (- தவிராது செய்யும் நீர்மையை யுடையவை) என்றும், 'கடப்பாடு' என்றும் வருவனவற்றால் அறிக.

## ஆசாரம் தவறாதவர் அடையும் நன்மைகள்.

2\. பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப, என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.

(இ - ள்.) பிறப்பு-நற்குடிப் பிறப்பு, நெடுவாழ்க்கை - நெடியவாழுள், செல்வம் - செல்வம், வனப்பு - அழகுடைமை, நிலக் கிழமை - நிலத்துக் குரிமை, மீக்கூற்றம் - சொற்செலவு, கல்வி - கல்வி, நோயின்மை - நோயின்மை, இ எட்டும் - என்று சொல்லப்பட்ட இவ்வெட்டினையும், இலக்கணத்தால் எய்துப - இலக்கணத்தோடு நிரம்பப்பெறுவர்; என்றும் ஒழுக்கம் பிழையாதவர் - என்றும் ஆசாரம் தப்பாமல் ஒழுகுவார்.

சதாசாரந் தப்பாதவர்கள், நல்ல குடிப்பிறப்பு - தீர்க்காயுசு - ஐசுவரியம் - அழகு - காணியாட்சி - சொற்செலவு - கல்வி - ஆரோக்கியம் என்னும் எட்டு நன்மைகளையும் நிரம்பப் பெறுவர்.

மீக்கூற்றம் - (மீ - மேல் - உயர்ச்சி; கூற்றம் - சொல்) - மேலான சொல்: எல்லாரும் ஏற்றுக்கொள்ளும் சொல், செல்லத்தக்க சொல். கூற்றத்தின் மீ எனப் பின்முன்னாகத் தொக்க தொகையாகக் கொண்டு, சொல்லினது மேன்மை அதாவது சொற்செலவு என்றார். செல்வாக்கு என்பது இப்பொருட்டே (தடையின்றிச் செல்லும் சொல்).

## தக்கிணை முதலிய நான்கையும் தவறாது நடத்தல்.

3. தக்கிணை வேள்வி தவங்கல்வி இந்நான்கும்
முப்பா லொழுக்கினால் காத்துய்க்க. உய்யாக்கால்
எப்பாலும் ஆகா கெடும்.

(இ - ள்.) தக்கிணை - குரவர்க்குத் தக்கிணை கொடுத்தலும், வேள்வி - யாகம் பண்ணுதலும், தவம் - தவஞ்செய்தலும், கல்வி - கல்வியும், இ நான்கும் - என இந்நான்கினையும், முப்பால் ஒழுக்கினால் - மூன்று வகைப்பட்ட விதியாலே, காத்து உய்க்க - பாது காத்து நடாத்துக. உய்யாக்கால் - நடாத்தாக்கால், எப்பாலும் ஆகா கெடும் - எவ்வுலகத்தின் கண்ணும் தனக்குப் பயனாகாவாய் இந்நான்கும் கெடும்.

தக்ஷிணைகொடுத்தல் முதலிய நான்கையும் சாஸ்திர விதி தப்பாமல் நடத்தவேண்டும். அங்ஙனம் நடத்தாவிடின் இவை களால் உண்டாகும் பயன எவ்வுலகத்தும் இல்லையாய்விடும்.

முப்பால் - அறம் பொருள் இன்பம். முப்பால் ஒழுக்கு - அறநூல் விதி - பொருணூல் விதி - இன்பநூல் விதி.

## வைகறையெழுந்து சிந்திப்பதும் செய்வதும்.

4. வைகறை யாமந் துயிலெழுந்து, தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து, வாய்வதின்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே,
முந்தையோர் கண்ட முறை.

(இ - ள்.) வைகறையாமம் துயிலெழுந்து - வைகறையாகிய பின்யாமத்திலே துயிலெழுந்து, தான் செய்யும் நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து - தான்

பிற்றை ஞான்று செய்யும் நல்லறத்தையும் ஒள்ளிய பொருட்கு வருவாயாகிய காரியத்தையும் ஆராய்ந்து சிந்தித்து, வாய்வதில் தந்தையும் தாயும் தொழுதெழுக என்பது - பின்னைக் கங்குல் புலர்ந்தால் பழுதின்றித் தந்தையையும் தாயையும் தொழுதெழுந்து ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குக என்று சொல்லப்படும் ஒழுக்கம், முந்தையோர் கண்ட முறை-அறிவுடைய பழையார் சொல்லிய முறைமை. [ஏ - அசை.]

விடியற் காலத்திலே விழித்து, அடுத்த நாளில் செய்தற்குரிய தருமகாரியங்களையும் திரவியஞ் சம்பாதிப்பதற்குவேண்டிய காரியங்களையும் ஆராய்ந்து யோசித்துக்கொண்டு, பின்பு பொழுது விடிந்தால் தாய்தந்தையரைத் தொழுதுகொண்டே, எழுந்து, அப்பால் ஒரு காரியம் செய்யத் தொடங்குக.

வைகறை - "விடியல் வைகறை புலரி உதயம்" (பிங்கலம்). இது வைகுறு என்றும் வழங்கும். "செவியறிவுறுத்தலைச் செவியறிவுறூஉ என்றாற்போல வைகுறுதலை வைகுறு என்றார். அது மாலையாமமும் இடையாமமும் கழிந்து அக் கங்குல் வைகுறுதல்; அது கங்குல் வைகிய அறுதியாதல் நோக்கி வைகறை எனவுங் கூறுப." விடியுமுன் பத்து நாழிகையளவு காலம். "விடியல் என்பது நாள்வெயிற்காலை" என்றும், "விடியல் வைகறை இடூஉ மூரன்" என்றது 'விடியற்கு முன்னர்த்தாகிய வைகறை என உருபு தொக்கு முன்மொழி நிலையலாயிற்று' என்றும் தொல்காப்பிய உரையில் கூறியிருப்பதால் விடியல் என்பது விளங்கும்.

வாய்வது - உண்மை: "தலைவர் வினைமுடித்து வருதல் வாய்வது" (முல்லைப்பாட்டு). வாய்வதில் - உண்மையில் - தப்பில்லாமல் - பழுதின்றி.

மதுரைக்காஞ்சி 714-வரி "இருந்துதயிலெடுப்ப இனிதி னெழுந்து" என்பதன் உரையில் இந்த வெண்பாவின் முதலிரண்டடிகள் எடுத்துக்காட்டப்பெற்றிருக்கின்றன. பிரயோக விவேகம் 39-வது சூத்திர வுரையில், 'கொழுநற் றொழுதெழுவாள்' என்பதற்குப் பரிமேலழகர் உரைத்த உரையை மறுக்குமிடத்திலும், இவ்வெண்பா எடுத்துக்காட்டப்பெற்றிருக்கிறது.

## எச்சிலுடனே தீண்டலாகாதவை.

5. எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தேவர்
உச்சந் தலையோ டிவையென்ப யாவரும்
திட்பத்தால் தீண்டாப் பொருள்.

(இ - ள்.) பசு பார்ப்பார் தீ தேவர் உச்சந்தலையோடு இவை - பசு பார்ப்பார் தீ தேவர் உச்சந்தலையோடேகூட இவற்றை, எச்சிலார் தீண்டார் என்ப - எச்சிலையுடையராய் யாவரும் தீண்டார் என்று சொல்லுவர். யாவரும் திட்பத்தால் தீண்டா பொருள்-எல்லாரும் யாப்புற எச்சிலோடு தீண்டப்படாத பொருளும் இவை.

பசு பார்ப்பார் நெருப்பு தேவதைகள் உச்சந்தலை என்பவைகளை எச்சிலையுடையராய் எவரும் தீண்டலாகாது.

எச்சிலார் என்பதற்கு இழிஞர் என்றும் பொருள் உண்டு. 'தெய்வம்' என்றும் பாடம். இனைவிராய் எண்ணிப் பன்மை பற்றி அஃறிணையால் முடிவதற்கு, இச்செய்யுள், இலக்கண விளக்கம் - பொதுவியல் 4-வது சூத்திரத்தின் உரையில் உதாரணமாகக் காட்டப்பெற்றிருக்கிறது. 'உச்சந்தலையோடியாவதும்' என்றும் பாடம். "அழலை யந்தணரைப் பசுவினை மிச்சில் அடைந்தனோர் தீண்டிடலாகா" என்பது காசி கண்டம்.

## எச்சிலுடனே காணலாகாதவை.

6. எச்சிலார் நோக்கார் புலைதிங்கள் நாய்நாயி
றத்தக வீழ்மீனோ டிவ்வைந்தும் தெற்றென
நன்கறிவார் நாளும் விரைந்து.

(இ - ள்.) புலை திங்கள் நாய் நாயிறு அத்தகவீழ் மீனோடு இ ஐந்தும் - புலையும் திங்களும் நாயும் ஞாயிறும் அழகிய வீழ்மீனோடு சொல்லப்பட்ட ஐந்தினையும், எச்சிலார் - எச்சிலையுடையார், விரைந்து தெற்றென - விரைந்து தெளிய, நாளும் - நாளும், நோக்கார் - கண்ணால் நோக்கார், நன்கறிவார் - நன்கறிவார்.

நன்கறிவார் எச்சிலையுடையராய்ப் புலையன் சந்திரன் நாய் சூரியன் எரிநக்ஷத்திரம் என்னும் ஐந்தையும் கண்ணால் காணலாகாது.

வீழ்மீன் - விண்வீழ்கொள்ளி.

## பாதுகாக்கத்தக்க எச்சில்கள்.

7. எச்சில் பலவும் உள.மற் றவற்றுள்
இயக்க மிரண்டும் இணைவிழைச்சு வாயில்
விழைச்சிவை எச்சிலிந் நான்கு.

(இ - ள்.) எச்சில் பலவும் உள - எச்சில்கள் பல வெச்சில்களும் உள. அவற்றுள்-அவற்றுள், இயக்கம் இரண்டும் - மல மூத்திரங்கள் இயங்கிய இயக்கம் இரண்டொடு கூட, இணைவிழைச்சு - இணைவிழைச்சும், வாயில் விழைச்சு - வாயினால் வழங்கிய விழைச்சும், இவை எச்சில் - என இவை எச்சிலாவன. இ நான்கு-இவ்வெச்சில் நான்கையும் பாதுகாக்க.[மற்று-அசை.]

எச்சில் பலவற்றில் முக்கியமாய்ப் பாதுகாக்கத்தக்கவை, மலங்கழித்தல் சலங்கழித்தல் புணர்ச்சி உமிநீர் என்பவையாம்.

'வாயினால்' என்றும் பாடம்.

எச்சிலுடனே செய்யத்தகாதவை.

8. நால்வகை யெச்சிலும் நன்கு கடைப்பிடித்
தோதார் உரையார் வளராரே எஞ்ஞான்றும்
மேதைக ளாகுறு வார்.

(இ - ள்). நால்வகை எச்சிலும் - கூறப்பட்ட இந்நான்கு எச்சிலையும், நன்கு கடைப்பிடித்து - மிகக் கடைப்பிடித்து, ஓதார் - ஒன்றனையும் ஓதார், உரையார்-வாயால் ஒன்றனையுஞ் சொல்லார், வளரார்-கண் துயிலார், எஞ்ஞான்றும் மேதைகள் ஆகுறுவார் - எஞ்ஞான்றும் மதியுடையராக வேண்டுவோர்.

முன்சொன்ன நால்வகை எச்சிலும் உண்டானவிடத்து, ஒன்றும் படித்தலும் ஆகாது; வாயால் ஒன்றையும் சொல்லவுங்கூடாது; நித்திரைசெய்தலும் ஆகாது.

வளர்தல் - கண்வளர்தல் - தூங்கல்.

காலைமாலைக் கடவுள் வணக்கம்.

9. நாளந்தி கோறின்று கண்கழீஇத் தெய்வத்தைத்
தானறியு மாற்றாற் றொழுதெழுக. அல்கந்தி
நின்று தொழுதல் பழி.

(இ - ள்.) நாளந்தி கோல்தின்று கண் கழீஇ - காலையின்கண் ஒரு கோலாலே பல்துலைத்துக்

கண்கழுவி, தெய்வத்தை தான் அறியும் ஆற்றால் தொழுது எழுக - தான் வணங்கும் தெய்வத்தைத் தான் அறியும் நெறியால் தொழுக பின்பு ஒருகருமத்தைத் தொடங்குக. அல்கந்தி - மாலைப்பொழுதின் கண், நின்று தொழுதல் பழி - தான் வணங்கும் தெய்வத்தை நின்றுதொழுதல் குற்றமாம் (இருந்து தொழுக).

அதிகாலையில் தந்தசுத்தி செய்துகொண்டு, தான் அறிந்த படி தெய்வவணக்கம் செய்துவிட்டு, அதன்பின் ஒரு காரியத்தைஆரம்பிக்கவேண்டும். மாலைக்காலத்தில் நின்றுகொண்டு தெய்வவணக்கம் செய்தல் குற்றமா மாதலால் உட்கார்ந்து கொண்டு அது செய்க.

அந்திசந்தி - காலைமாலை. நாளந்தி - நாள்காலை - சிறு காலை. அந்தி - கூடுதல்-பொருந்துதல் : பகலும் இரவும் கூடு கின்ற வேளை. அல்குதல்-குறைதல் . வெளிச்சம் குறைந்திருப்பது. அல்கந்தி - மாலை. கோல்தின்றலாவது பற்குச்சால் பல் விளக்குதல். தானறியு மாற்றால் என்பது அவரவா சமய முறைபின்படி அல்லது சமயகோட்பாட்டின்படி என்பதாம்.

நீராடுதல் இன்றியமையாத சமயங்கள்.

10. தேவர் வழிபாடு தீக்கனா வாலாமை
உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண்பொழுது
வைகு துயிலோ டிணைவிழைச்சுக் கீழ்மக்கள்
மெய்யுறல் ஏனை மயலுறல் ஈரைந்தும்

(இ - ள்.) தேவர்வழிபாடு - தன்னால் வணங்கப்படும் தேவரை வழிபடுதற்கண்ணும், தீக்கனா-தீக்க

கண்டவிடத்தும், வாலாமை - தூய்மையின்மை உண்டான விடத்தும, உண்டது கான்றல - உண்டதனைக் கூன்றவிடத்தும், மயிர்களைதல் - மயிர்களைந்தவிடத்தும், ஊண் பொழுது - உண்ணும் பொழுதும், வைகு துயிலோடு-பொழுதேற உறங்கிய விடத்தும், இணைவிழைச்சு - இணைவிழைச்சு உண்டாயினவிடத்தும், கீழ்மக்கள் மெய்யுறல் - கீழ்மக்களுடம்பு தீண்டிய விடத்தும், ஏனை மயல் உறல் - மூத்திரபுரீடம் கால்வான் உறைவிடத்தும், ஈரைந்தும் - என இப் பத்திடத்தும், ஐயுறாது நீர்ஆடுக - ஐயுறாதே நீராடுக. [ புரீடம் - மலம்.]

தெய்வவணக்கம் செய்யும்போதும், கெட்ட கனுக் கண்டவிடத்தும், அசுசி உண்டானபோதும், உண்டதைக் கக்கினவிடத்தும், *க்ஷவரம் செய்துகொண்டபோதும், உண்ணும் பொழுதும், பொழுதேற நித்திரைசெய்தபோதும, புணர்ச்சி உண்டான விடத்தும், இழிசனர்களைத் தீண்டினபொழுதும், மலசலங்கழித்தவிடத்தும், நீராடவேண்டும்.

வாலாமை - (வால் - சுத்தம்) - சுத்தமில்லாமை. உண்டது கான்றல் - வமனம் - வாந்தி. வைகுதுயில் - (வைகு - தங்கு) - படுக்கையில் நெடுநேரம் தங்கிய துயில்-பொழுதேற உறங்கல். கால்வான் - கால - நீக்கும்பொருட்டு.

## சில அநாசாரம்.

11. 'உடுத்தலால் நீராடார். ஒன்றுடுத் துண்ணார்.
உடுத்தாடை நீருட் பிழியார். விழுத்தக்கார்
ஒன்றுடுத் தென்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை.

(இ-ள்.) உடுத்தலால் நீராடார்-ஒன்றனை உடுத்தல்லது நீராடார். ஒன்றுடுத் துண்ணார் - இரண்டுடுத்தன்றி ஒன்றுடுத் துண்ணார். உடுத்த ஆடை நீருள் பிழியார் - உடுத்த ஆடையை நீரின்கண் பிழியார். விழுத்தக்கார் - சீர்மை தக்கவர், ஒன்று உடுத்து என்றும் அவை புகார் - ஓராடை உடுத்து அவையின் கண் செல்லார், என்பது - என்று சொல்லப்படுவது, முந்தையோர் கண்ட முறை - பழையார் கண்ட முறைமை. [ஏ - அசை.]

ஆடையின்றி ஸ்நாநஞ்செய்தலும், இரண்டன்றி ஓராடை மாத்திரம் உடுத்துக்கொண்டு உண்ணுதலும், ஒருவர் தாம் உடுத்த ஆடையைத தோய்த்துத் தண்ணீரிலே பிழிதலும், ஓராடை உடுத்துக்கொண்டு சபையில் போதலும் கூடா.

"உடுத்தாடை யில்லாதார நீராட்டும்" என்பது திரிகடுகம். விழுத்தக்கார்—விழுமம்+தக்கார் (விழுமம் - பெருமை, சீர்மை)—பெருமையின தகுதி யுடையவர்.

12. தலையுரைதத எண்ணெயால் எவ்வுறுப்பும் தீண்டார்.
பிறருடுத்த மாசுணியும தீண்டார். செருப்புக்
குறையெனினும் கொள்ளார் இரந்து.

(இ-ள்.) தலை உரைத்த எண்ணெயால் - தலையின்கண் தேய்த்த எண்ணெயால், எவ்வுறுப்பும் தீண்டார் - யாதோர் உறுப்பும் தீண்டார். பிறர் உடுத்த மாசுணியும் தீண்டார் - பிறர் உடுத்த அழுக்காடையும் தீண்டார். இரந்து குறையெனினும் செருப்பு கொள்ளார் - பிறர் இரந்து தமக்குக் காரியமென்று வேண்டிக்கொள்ளினும் பிறர் தொட்ட செருப்பும் கொள்ளார்.

தலையில் தேய்த்த எண்ணெயை வழித்து மற்ற அவயவங்களில் பூசுதலாகாது. மற்றவர்கள் உடுத்த அழுக்கு வஸ்திரத்தைத் தீண்டுதல் கூடாது. அவசரமான ஒரு காரியத்தைச் செய்துதரும்படி பிறர் இரந்து வேண்டிக்கொண்ட விடத்தும் பிறருடைய செருப்பைக் காலில் அணிந்துகொள்ளுதல் கூடாது.

எண்ணெய்-எள்நெய். மாசுணி-மாசுஉண்டது-அழுக்காடை.

13. நீருள் நிழற்புரிந்து நோக்கார். நிலமிராக்
கீறார். இராமரமும் சேரார். இடரெனினும்
நீர்தொடா தெண்ணெய் உரையார். உரைத்தபின்
நீர்தொடார் நோக்கார் புலை.

(இ - ள்.) நீருள் நிழல் புரிந்து நோக்கார் - நீரின் கண் தம் நிழலை விரும்பி நோக்கார். நிலம் இரா கீறார் - நிலத்தை இருந்து கீறார். இரா மரமும் சேரார் - இரவின்கண் ஒரு மரத்தின்கண்ணும் சேரார். இடர் எனினும் - நோய்கொண்டு இடர்ப்பட்டாராயினும், நீர் தொடாது எண்ணெய் உரையார்-நீரைத் தொடாதே எண்ணெய் உடம்பின்கண் தேயார். உரைத்தபின் - அவ்வெண்ணெய் தேய்த்தபின், நீர் தொடார் - தம் உடம்பின்மேல் நீரைத் தெளித்துக் கொள்ளாது, புலை நோக்கார் - புலையைத் தம் கண்ணால் நோக்கார்.

தண்ணீரிலே தம்முடைய நிழலைப் பார்த்தலும், சும்மா உட்கார்ந்துகொண்டு தரையைக் கீறுதலும், இரவில் ஒரு மரத்தின் அருகிலே போதலும், நீரைத் தொடாமல் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதலும், எண்ணெய் தேய்த்துகொண்டபின் உடம்பின்மேல் நீரைத் தெளித்துக்கொள்ளாமல் புலையனைப் பார்த்தலும் ஆகா.

(முதல்) இரா-செய்யாவென்னும் வினையெச்சம். (இரண்டாவது) இரா - இரவு.

நீராடு நீர்மை.

14. நீராடும் போழ்தில் நெறிப்பட்டார் எஞ்ஞான்றும்
நீந்தார் உமியார் திளையார் விளையாடார்.
காய்ந்த தெனினும் தலையொழிந் தாடாரே
ஆய்ந்த அறிவி னவர்.

(இ - ள்.) நெறிப்பட்டார்-ஒரு முறைப்பட்டார், நீராடும் போழ்தில்-நீராடும் போழ்தின்கண், எஞ்ஞான்றும் - ஒருநாளும், நீந்தார் - நீந்தார், உமியார் - நீரின்கண் உமியார், திளையார்-நீரைக் குடைந்து திளையார், விளையாடார் - விளையாடுவதும் செய்யார். காய்ந்தது எனினும் - எண்ணெய் பெறாது தலை காய்ந்ததெனினும், தலை ஒழிந்து ஆடார் - தலையொழிய நீராடார், ஆய்ந்த அறிவினவர்-ஆய்ந்த அறிவினர். [ஏ-அசை.]

குளமுதலானவைகளில் குளிக்கும்போது, நீந்துதலும், தண்ணீரிலே எச்சில் உமிதலும், தண்ணீரைக் குடைதலும், தண்ணீரிலே விளையாடுதலும் கூடா. எப்போதும் தலை நீங்கலாகக் கண்ட ஸ்நானம் செய்தலாகாது.

தன்னுடம்புபோல் போற்றத்தக்கவை.

15. ஐம்பூதம் பார்ப்பார் பசுத்திங்கள் ஞாயிறு
தம்பூத மெண்ணா திகழ்வானேல் தன்மெய்க்கண்
ஐம்பூதம் அன்றே கெடும்.

(இ - ள்.) ஐம்பூதம் - நிலம் முதலாயின ஐம்பூதங்களையும், பார்ப்பார் பசு திங்கள் ஞாயிறு - பார்ப்

பாரையும் பசுக்களையும் திங்களையும் ஞாயிற்றையும், தன் பூதம் எண்ணாது - தன் உடம்புபோலக் கருதிப் போற்றாது, இகழ்வானேல் - இகழ்வானாயின், தன் மெய்க்கண் - தன் உடம்பின்கண் உள்ள, ஐம்பூதம் - ஐந்து பூதத்தையுமுடைய தெய்வங்கள், அன்றே கெடும் - அன்றே கெட்டகன்று போம்.

பஞ்சபூதம் - பிராமணர் - பசு - சந்திரன் - சூரியன் என்பவைகளைத் தன்னுடம்புபோலப் போற்றாவிட்டால், தன்னுடம்பினிடத்தி லுள்ள ஐந்து பூதத்தையு முடைய தெய்வங்கள் உடனே நீங்கிவிடும்.

தன் பூதம் என்பது எதுகைபற்றித் தம்பூதம் என வந்தது. 'தம்பூத மெண்ணாது' என்றும் பாடம்.

## ஐங்குரவரும் அவரைத் தொழுதலும்.

16. அரசன் உவாத்தியான் தாய்தந்தை தம்முன்
நிகரில் குரவர் இவர். இவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
யாவரும் கண்ட நெறி.

(இ - ள்.) அரசன் உவாத்தியான் தாய் தந்தை தம்முன் இவர் - அரசனும் உவாத்தியும் தாயும் தந்தையும் தனக்கு மூத்தோனும் என இவர்கள், நிகர் இல் குரவர் - தமக்கு நிகரில்லாத குரவராவர். இவரை - இவர்களை, தேவரைப்போலத் தொழுது எழுக - தேவரைப்போலத் தொழுதெழுக, என்பது - என்று சொல்லப்படுவது, யாவரும் கண்ட நெறி - எல்லா நல்லாரும் உரைத்துச்சொல்லிய நெறி. [ஏ-அசை.]

அரசன் - ஆசிரியன் - தாய் - தகப்பன் - அண்ணன் என்பவர் ஐங்குரவா ஆவர். இவர்களைத் தேவரைப்போலத் தொழுதெழுதல் வேண்டும்.

உவாத்தியான் - உபாத்யாயன் என்கிற வடசொல். சிறுபாணாற்றுப் படையில் "முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவும்" என்னும் 231-வரியின் உரையில் இச்செய்யுளின் முதலடி உதகரிக்கப்பெற்றிருக்கின்றது.

## சில அநாசாரம்.

17. குரவ ருரையிகந்து செய்யார். விரதம்
குறையுடையார் தீர மறவார். நிறையுவா
மெல்கோலும் தின்னார்: மரங்குறையார் என்பதே
நல்லறி வாளர் துணிவு.

(இ - ள்.) குரவர் உரை - முன்பு கூறப்பட்ட குரவர்கள் சொல்லிய சொல்லை, இகந்து செய்யார் - கடந்து ஒன்றனையும் செய்யார். குறை விரதம் உடையார்-முடியாது கிடந்த குறைவிரத முடையார், தீர மறவார் - மிக வதனை மறந்தொழுகார். நிறை உவா-மதிநிறைந்த உவாவின்கண், மெல்கோலும் தின்னார்-தம் பல் துடைப்பதும் செய்யார் : மரம் குறையார் - அவ்வுவாவின்கண் மரங்களையும் குறையார், என்பது-என்று சொல்லப்படுவது, நல் அறிவாளர் துணிவு - நல்லறிவாளர் தொழில். [ஏ - அசை]

ஐங்குரவர் சொல்லிய சொல்லைக் கடந்து ஒரு காரியத்தையும் செய்யலாகாது. முடிவுபெறாத குறைவிரதம் உடையவர்கள் அவ்விரதத்தை மறத்தல் கூடாது. பூரணையில் பல்தேய்த்தலுமாகாது: மரங்களை வெட்டுதலுமாகாது.

'இகழ்ந்து செய்யார்' என்றும் பாடம். உவா - அமாவாசி - பூரணை இரண்டுக்கும் பெயர்: நிறையுவா என்றது

## போஜனக் கிரமம்.

18. நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலஞ்செய்
துண்டாரே உண்டா ரெனப்படுவார். அல்லாதார்
உண்டார்போல் வாய்பூசிச் செல்வா. அதுவெடுத்துக்
கொண்டார் அரக்கர் குறித்து.

- ள்.) நீராடி - குளித்து, கால் கழுவி - கால் வாய்பூசி - வாய் பூசி, மண்டலம் செய்து - உண்ணுமிடம் மண்டலஞ்செய்து, உண்டார் - உண்டார், உண்டார் எனப்படுவர் - உண்டாராவர். அல்லாதார் - இப்படியொழிய உண்டவர், உண்டார் போல் - உண்டாரைப்போல, வாய்பூசி செல்வர் - வாய்பூசிப் போவர். அது - அவருணவை, அரக்கர் குறித்து எடுத்துக்கொண்டார் - அரக்கர் எடுத்துக் கொண்டார். [ஏ - அசை.]

குளித்துக் காலைக்கழுவி வாயைத் துடைத்துக்கொண்டு, உண்ணுமிடத்தை மண்டலஞ்செய்து, அப்புறம் உண்டவரே உண்டவராவர். இப்படிச் செய்யாதவருடைய உணவை ராக்ஷசர் எடுத்துக்கொள்வா.

'மண்டிலஞ் செய்து' என்றும் பிரதிபேதம். உண்ணுமிடத்தை மண்டலஞ்செய்த லாவது, உண்கலத்தைச் சுற்றி வேதவிதிப்படி மந்திரஞ்சொல்லி நீரிறைத்தல். "அருமறையானீர் வலஞ்செய் தடிசில் தொட்டு" என்பதும், "மண்டிலஞ் சோட்டி உண்கல னத்தன்மேல் வைத்தினி தயில்க" என்பதும் காசிகண்டம். வாய்பூசுதல் - வாயைத் துடைத்தல். அரக்கர்

எடுத்துக்கொள்ளும் துணிவுபற்றி "எடுத்துக்கொண்டார்" என இறந்தகாலத்தால் கூறினார். மந்திரஞ்சொல்லி நீரிறைத்த இடத்தை அசுரர் அணுகார் என்பது ஓர் ஐதிகம். சீவக சிந்தாமணி - பதுமையாரிலம்பகம் - 137 - செய்யுளில் "பொன்னடிகழீஇயபின்றைப் புரிந்து வாய் நன்குபூசி" என்னுமடியின் உரையில் இந்த வெண்பாவின் முதலடி எடுத்துக்காட்டப்பெற்றிருக்கின்றது.

19. காலினீர் நீங்காமை உண்டிடுக: பள்ளியும்
ஈரம் புலராமை ஏறற்க என்பதே
பேரறி வாளர் துணிவு.

(இ - ள்.) காலினீர் நீங்காமை உண்டிடுக - கால் கழுவி நீர் உலருவதற்கு முன்னே உண்ணத் தொடங்குக; பள்ளியும் ஈரம் புலராமை ஏறற்க - பாயலின் கண்ணும் கால்கழுவிய ஈரம் புலர்ந்தாலன்றி ஏறு தொழிக; என்பது-என்று சொல்லப்படுவது, பேரறிவாளர் துணிவு - பேரறிவாளர் துணிவு. [ஏ-அசை.]

கால்கழுவின ஈரம் உலரும் முன்னரே உண்ணத் தொடங்குக: கால்கழுவின ஈரம் உலர்ந்த பின்னரே படுக்கையில் படுக்க.

பிரயோக விவேகம் 39 - வது சூத்திர வுரையில் இந்த வெண்பாவின் முதலிரண்டடிகள் எடுத்துக்காட்டப்பெற்றிருக்கின்றன.

20. உண்ணுங்கால் நோக்கும் திசைகிழக்குக் கண்ணமர்ந்து
தூங்கான் துளங்காமை நன்கிரீஇ யாண்டும்
பிறிதியாதும் நோக்கான் உரையான் தொழுதுகொண்
டுண்க உகாஅமை நன்கு.

(இ - ள்.) உண்ணுங்கால் - உண்ணும் போது, நோக்கும் திசை கிழக்குக்கண் அமர்ந்து - நோக்கப் படும் திசை கீழ்த்திசை யாங்கண் பொருந்தி, தூங்கான் துளங்காமை-தூங்காது புடைபெயராது, நன்கு இரீஇ - நன்றாக இருந்து, யாண்டும் பிறிது யாதும் நோக்கான் உரையான் - எவ்விடத்தும் பிறிதொன் றனை நோக்காது சொல்லாது, தொழுதுகொண்டு - உண்கின்ற உணவினைத் தொழுது, உகாமை நன்கு உண்க - சிந்தாமல் செவ்விதாக உண்க.

உண்ணும்போது, கிழக்குமுகமாகப் பொருந்தி, தூங்கா மலும் அசையாமலும் நன்றாக உட்கார்ந்துகொண்டு, வேறொன் றையும் பார்க்காமலும் பேசாமலும், உண்ணும் உணவைத் தொழுதுகொண்டே சிந்தாமல் செவ்விதாக உண்க.

"தொழுதுகொண் டுண்க உகாஅமை நன்கு" என்பது சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம் 101-செய்யுளுரையில் மேற் கோளாகக் காட்டப்பெற்றிருக்கிறது.

21. விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லால்உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்.

(இ - ள்.) விருந்தினர் மூத்தோர் பசு சிறை பிள்ளை இவர்க்கு - விருந்தினரும் மிக மூத்தோரும் பசுக்களும் சிறைகளும் பிள்ளைகளும் என்று சொல் லப்பட்ட இவர்கட்கு, ஊண் கொடுத்தல்லால் உண் ணார் - உணவு கொடுத்தல்லது உண்ணார், என்றும் ஒழுக்கம் பிழையாதவர் - என்றும் ஒழுக்கம் பிழையா தார். [ஏ - அசை.]

விருந்தினர் முதியோர் பசுக்கள் பக்ஷிகள் பிள்ளைகள் என்ற இவர்களுக்கு உணவு கொடாமல் தாம் முன்னதாக உண்ணலாகாது.

விருந்தினர் - (விருந்து - புதுமை) - புதியராய் வந்தவா - அதிதிகள். சிறை - இறகுடையது : பறவை.

22. ஒழிந்த திசையும் வழிமுறையால் நல்ல.
முகட்டு வழியூண் புகழ்ந்தார். இகழ்ந்தார்
முகட்டு வழிகட்டிற் பாடு.

(இ - ள்.) ஒழிந்த திசையும் வழிமுறையால் நல்ல - முன்சொன்ன கீழைத்திசையும் அக்கீழைத் திசைக்கு இடையூறுளதாயின் பின்னை (நோக்கியுண் டற்கு) மற்றைத் திசைகளும் நல்லவாம். முகட்டுவழி ஊண் புகழ்ந்தார் - வாயிலின் நேரிருந்து, உண்டலை ஆமெனப் புகழ்ந்தார்கள். முகட்டுவழி கட்டில் பாடு இகழ்ந்தார் - முகட்டின்நேர் கட்டிலிட்டுக் கிடக்கல் ஆகாதென்று பழித்தார்கள் நல்லர்.

உண்ணும்போது முன்சொன்ன கிழக்குமுகமாகப் பொருந்தியிருக்கத் தடைநேரிட்டால் மற்றத் திசைகளை நோக்கி உண்ணலாகும். வாயிற்படிக்குநேராக இருந்து உண்ணுதல் தகுதி. வாயிற்படிக்கு நேராகக் கட்டிலிட்டுப்படுத்தல் தகுதியன்று.

பாடு - (படுத்தல்) முதனிலை திரிந்த தொழிற்பெயா.

23. கிடந்துண்ணா ; நின்றுண்ணார் ; வெள்ளிடையும் உண்ணார் ;
சிறந்து மிகவுண்ணார் கட்டின்மேல் உண்ணார் :
இறந்தொன்றும் தின்னற்க நின்று.

(இ - ள்.) கிடந்து உண்ணார் - கிடந்துண்ணல் ஆகாது. நின்று உண்ணார் -

வெள்ளிடையும் உண்ணார் - வெள்ளிடையின்கண் ருந்துண்ணல் ஆகாது. சிறந்து மிக உண்ணார் - விரும்பி மிகவும் உண்ணல் ஆகாது. கட்டில்மேல் உண்ணார் - கட்டில்மேல் இருந்து உண்ணல் ஆகாது. இறந்து ஒன்றும் தின்று தின்னற்க-நெறியைக் கடந்து மிக யாதொன்றும் தின்று தின்னல் ஆகாது.

படுத்துக்கொண்டும் நின்றுகொண்டும் வெளியிடத்தில் கொண்டும் உண்ணலாகாது. ஆசையுடன் அதிகமாக ண்ணல் ஆகாது. கட்டிலின்மேல் இருந்துகொண்டு உண்ண லாகாது. முறைமையைக் கடந்து யாதொன்றையும் தின்று தின்னல் ஆகாது.

வெள்ளிடை - (வெளி+இடை) - வெளியிடம். இறந்து - - அளவு கட) - நெறிகடந்து - முறைமை கடந்து.

24. முன்துவ்வார் முன்னெழார் மிக்குறார்; ஊணின்க என்பெறினும் ஆற்ற வலமிரார்; தம்மிற் [ண் பெரியார்தம் பாலிருந்தக் கால்.

(இ - ள்.) தம்மிற் பெரியார் தம்பால் இருந்தக் கால் - தம்மிற் பெரியார் தம்பந்தியில் இருந்து உண் ணுமிடத்து, முன்துவ்வார் - அப்பெரியார் உண்ப தற்குமுன்னே தாமுண்ணார்; முன் எழார் - முந்துற எழுந்திரார்; மிக்குறார் - அவர்களை நெருக்கியிரார்; ஊணின்கண் என்பெறினும் ஆற்ற வலம் இரார் - உண்ணுமிடத்து மிக யாதாலும் பெறினும் வல ருந்து உண்ணற்க.

பெரியோர்களுடனே சமபந்தியாக இருந்து உண்ணும் போது, அவர்கள் உண்ணுமுன்னே உண்ணுதலும், அவர்கள்

எழுவதற்குமுன்னே எழுதலும், அவர்களை நெருக்கியிருத்த லும், அவர்களுக்கு வலப்பக்கத்திலிருந்து உண்ணுதலும் ஆகா.

'மீக்கூறுர்' என்றும், 'பெரியார் விரலிருந்தக்கால்' என்றும் பாடபேதம் உண்டு. துவ்வாா என்பதில் து (- உண்) பகுதி; இப்பகுதியினடியாகத் 'துப்பாா'—துத்தேன்-'துத்த' -துத்து என வருவன உள.

25. கைப்பன வெல்லாம் கடை, தலை தித்திப்ப,
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண்.

(இ - ள்.) கைப்பன எல்லாம் கடை (ஆக) - கைக்கும் கறியெல்லாம் முடிவின்கண்ணுகவும், தித்திப்ப (எல்லாம்) தலை (ஆக) - தித்திக்கும் கறியெல்லாம் முதலாகவும், ஒழிந்த (எல்லாம்) இடையாக - ஒழிந்த சுவைகளுள்ள கறிகளெல்லாம் இடையாகவும், முறைவகையால் - கிரமப்படி, மெச்சும் வகையால் - புகழும் வகையான், ஊண் துய்க்க - உண்க.

உண்ணும்போது கசக்குங் கறிகளைக் கடைசியாகவும், தித்திக்கும் கறிகளை முதலாகவும், மற்றச் சுவைகளுள்ள கறிகளை நடுவாகவும் உண்க.

சீவக சிந்தாமணி பதுமையாரிலம்பகம் 136 செய்யுள் மூன்றுமடி "இன்மலர்த் தவிசினுச்சி இருந்தமிர் தினிதிற் கொண்டான்" என்பதற்கு இந்த வெண்பாவின் முதலடி மேற்கோள் காட்டப்பெற்றிருக்கின்றது.

26. முதியவரைப் பக்கத்து வையார்.விதிமுறையால்
உண்பவற்று ளெல்லாம் சிறிய கடைப்பிடித்
தன்பிற் றிரியாமை ஆசாரம் நீங்காமை
பண்பினுல் நீக்கல் கலம்.

(இ - ள்.) முதியவரை பக்கத்து வையார் - தம்மில் மூத்தார் உண்ணும்பொழுது அம் மூத்தாரைத் தம் பக்கத்து வைத்து உண்ணார். விதிமுறையால் உண்பவற்றுள் எல்லாம் - முறைமையான் உண்ணுங் கலங்கள் எல்லாவற்றுள்ளும், சிறிய-சிறிய கலங்களை, கடைப்பிடித்து -கடைப்பிடித்துத் தனக்குக்கொண்டு, அன்பில் திரியாமை - காதலில் பிழையாத வகையும், ஆசாரம் நீங்காமை - ஒழுக்கத்தில் நீங்காத வகையும் உண்டு, (வரைவோடுகூட உண்டமைந்தால்), கலம் பண்பினால் நீக்கல் - உள்ள கலங்களை முறைபட நீக்குக.

தம்மைப்பார்க்கிலும் முதியார் உண்ணும்போது அவரைத் தமது பக்கத்திலே வைத்து உண்ணலாகாது. உண் கலங்களுள் சிறிய கலங்களை அமைத்துக்கொண்டு அன்பும் ஆசாரமும் தவறாமல் உண்க. உண்டபின் உண்கலங்களைக் கிரமமாக நீக்கிவிடுக.

(ஆசாரம் நீங்காமை) உண்டு என்பது சொல்லெச்சம். வரைவு - வரையறை. நீக்கல் - அல்லீற்று வியங்கோள்.

27. இழியாமை நன்குமிழ்ந் தெச்சில் அறவாய்
அடியோடு நன்கு துடைத்து, வடிவுடைத்தா
முக்கால் குடித்துத் துடைத்து முகத்துறுப்
பொத்த வகையால் விரலுறுத்தி வாய்பூசல்,
மிக்கவர் கண்ட நெறி.

(இ - ள்.) இழியாமை - வாயில் புக்கநீர் உள் புகாமை, நன்கு உமிழ்ந்து - மிகவும் உமிழ்ந்து, எச்சில் அற-எச்சில் அறும்படி, வாய் அடியோடு நன்கு துடைத்து - வாயையும் அடியையும் மிகத்துடைத்து,

வடிவு உடைத்தாக - அழகு உடைத்தாக, முக்கால் குடித்துத் துடைத்து-முக்கால் குடித்துத் துடைத்து, முகத்து உறுப்பு - முகத்தின்கண் உள்ள உறுப்புகளை, ஒத்த வகையால் - அவற்றுக்குப் பொருந்தும் வகையால், விரல உறுத்தி - விரலகளை உறுத்தி, வாய்பூசல் - (அப்பெற்றியானே) பூசும்பூச்சு, மிக்கவர் கண்டநெறி - நெறிமிக்கவர் கண்ட நெறி.

உண்ட பிறகு, வாயில் கொண்ட நீரை உள்ளே போகாதபடி நன்றாகக் கொப்பளித்து உமிழ்ந்துவிட்டு, எச்சிலறும்படி வாயையும் பாதத்தையும் நன்றாகத் துடைத்துக்கொண்டு, மும்முறையாகத் தண்ணீர் பருகி, அப்பால் கண் காது மூக்கு முதலானவைகளைத் துடைத்துக்கொள்க. இது தான உண்டபின் வாய்பூசும் பூச்சு.

முக்கால் குடித்தலாவது ஆசமனஞ் செய்தல். "வாய்பூச்சு" என்றும் பாடம். சீவகசிந்தாமணி பதுமையாரிலம்பகம் 137-வது செய்யுள

"வாசநற்பொடியுநீருங்காட்டிடக்கொண்டுவாய்ப்பப்
பூசறுத்தங்கைநீரைமும்முறைகுடித்துமுக்கால்
காசறத்துடைத்தபின்றைக்கைவிரலுறுப்புத்தீட்டித்
தூசினலங்கைநீவியிருந்தனன்தோற்றமிக்கான்"

எனவருகின்றது.

28. இருகையால் தண்ணீர் பருகார். ஒருகையால்
கொள்ளார் கொடாஅர் குரவர்க்கிருகை
சொறியார் உடம்பு மடுத்து.

(இ - ள்.) இருகையால் - இருகையால் முகந்தும் ஏற்றும், தண்ணீர் பருகார் - தண்ணீர் குடியார். ஒருகையால் கொள்ளார் - குரவர் கொடுப்பனவற்றை

ஒரு கையால் வாங்கிக்கொள்ளார்; குரவர்க்கு (ஒரு கையால்) கொடார் - அவர்க்குத் தாம் ஒரு கையால் கொடார். உடம்பு மடுத்து இருகை சொறியார் - உடம்பினை மடுத்து இரு கையால் சொறியார்.

தண்ணீரை இரண்டு கைகளால் மொண்டும் வாங்கியும் குடிக்கலாகாது. பெரியோர் கொடுப்பதை ஒருகையால் வாங்குதலும் அவர்க்குக் கொடுப்பதை ஒரு கையால் கொடுத்தலும் கூடா. உடம்பை இரண்டு கையாலும் சொறியலாகாது.

சொறிதல் - பிறாண்டல். மடுத்து - அடைந்து - சேர - நெருக்கமாக.

## அந்திப்பொழுது செய்வன தவிர்வன.

29. அந்திப் பொழுது கிடவார் நடவாரே.
உண்ணார் வெகுளார் விளக்கிகழார் முன்னந்தி
அல்குண் டடங்கல் வழி.

(இ - ள்) அந்திப்பொழுது-மாலைப்பொழுதின்கண், கிடவார் நடவார்-கிடத்தலும் வழி நடத்தலும் செய்யார்; வெகுளார் - ஒருவரைச் சீறுவதும் செய்யார். முன்னந்தி - அந்திப்பொழுது, விளக்கு இகழார் - விளக்கு இகழாது ஏற்றுவர். (அந்திப் பொழுது) உண்ணார்-மாலைப்பொழுதின்கண் உண்ணாது, அல்கு - அல்கலின்கண், உண்டு - உண்டு, அடங்கல்-புறம்போகாது ஓரிடத்தின் கண்ணே அடங்குதல், வழி - நெறி. [ஏ - அசை]

முன்னந்தி என்பது (அந்திமுன்) பின்முன்... தொகை: அந்தியினது முன்பகுதி - அந்தியின்... "அந்திப்பொழுதிற கிடவார்" என்றும் ...

மறைமலை அடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS
A1-200

### சயனக்கிரமம்.

30. கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வந் தொழுது,
வடக்கொடு கோணம் தலைசெய்யார், மீக்கோள்
-ல்கொடுத்துச் சேர்தல் வழி.

(இ - ள்.) கிடக்கும் கால் - கிடக்கும்பொழுது, தெய்வம் கைகூப்பித் தொழுது - தெய்வத்தைக் கை கூப்பித் தொழுது, வடக்கொடு கோணம் தலைசெய்யார் - வடதிசையின்கண்ணும் கோணதிசையின் கண்ணும் தலைவையாது, மீக்கோள் உடல்கொடுத்து சேர்தல்-மேற்போர்ப்பதொன்றினை உடம்பின்கண் கொடுத்துக் கிடத்தல், வழி - நெறி.

படுக்கும்போது, கடவுளைத் தொழுது, வடதிசையிலும் கோணதிசையிலும் தலையைவைக்காமல் மற்றத் திசைகளில் ஏற்ற பெற்றி ஒரு திசையில் வைத்து, மேலே ஒரு வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு படுத்தல்வேண்டும்.

மீக்கோள் - (மீ - மேலே, கோள் - கொள்ளப்படுவது)- சரீரத்தின்மேல் கொள்ளப்படுவது: மேற்போர்வை. "தலை

### வழிபோம்பொழுது வழுவுதலும் வழாமையும்.

31. இருதேவர் பார்ப்பார் இடைபோகார். தும்மினும்
மிக்கார் வழுத்தின் தொழுதெழுக. ஒப்பார்க்
குடன்செல்லல் உள்ளம் உவந்து.

(இ - ள்.) இருதேவர் பார்ப்பார் இடைபோகார் - இருதேவர் நடுவும் பார்ப்பார் பலர் நடுவும்

ஊடறுத்துப் போகார். தம்மினும் மிக்கார் வழுத்தின் தொழுதெழுக - தம்மின பொழுதும் மிக்கார் வழுத்தினால் தொழுதெழுக. ஒப்பார்க்கு உடன் செல்லல் உள்ளம் உவந்து - தம்மோ டொப்பார்க்கு வழி போம்போது உடனே நேர்செல்க தம்முள்ளம் உவந்து.

ஓரிடத்துக்குப் போகும்போது, இரண்டுதேவர் நடுவிலும் பல பார்ப்பார் நடுவிலும் போதல் கூடாது. எவராகிலும் தம்மினவிடத்தும் பெரியோர்கள் வாழ்த்தினால் தொழுதுகொண்டே செல்க. வழிபோகும்போது சமானமான சிநேகர்களுடனே அவர்கட்கு நேரே மனக்களிப்புடன் செல்க.

செல்லல் - வியங்கோள். பெரியோர் கூடியிருக்கும் சபை நடுவிலும் ஊடறுத்துப் போதலாகாது என்கிற ஆசாரம், "என்றாடறுத்துச் சென்றாலும் மனறாடறுத்துச் செல்லற்க" என்னும் பழமொழியால் விளங்கும்.

## உமிழ்தலும் மலசலமோசனஞ் செய்தலும் ஆகாத இடங்கள்.

32. புற்பைங்கூழ் ஆப்பி சுடலை வழிதீர்த்தம்
தேவ குலம்நிழல் ஆனிலை வெண்பலியென்.
றீரைந்தின் கண்ணும் உமிழ்வோ டிருபுலனும்
சோரார் உணர்வுடை யார்.

(இ - ள்) புல் - புல்லின்கண்ணும், பைங்கூழ் - விளைநிலத்தின் கண்ணும், ஆப்பி - ஆப்பியின்கண்ணும், சுடலை - சுடலையின் கண்ணும், வழி - வழியின் கண்ணும், தீர்த்தம் - தீர்த்தத்தின் கண்ணும், குலம் - தேவர்கோட்டத்தின் கண்ணும்,

வின்கண்ணும், ஆன்நிலை - ஆநிரை நிற்குமிடத்தின் கண்ணும், வெண்பலி - சாம்பலின்கண்ணும், என்ற ஈரைந்தின் கண்ணும் - என்ற ஈரைந்தின் கண்ணும்; உமிழ்வோடு - உமிநீரையும், இருபுலனும் - மூத்திர புரீடங்களையும், சோரார் - சோரார், உணர்வு உடையார் - உணர்வுடையோர்.

புல் முளைத்திருக்கின்ற இடம், பயிர் விளைகின்ற இடம், பசுச்சாணம், சுடுகாடு, வழி, தீர்த்தம், கோயில், நிழலுள்ள இடம், பசுமாதை நிற்கின்ற இடம், சாம்பல் ஆகிய பத்திடங்களிலும் எச்சிலுமிழ்தலும் மலசலங்கழித்தலும் ஆகா.

ஆப்பி - (ஆ+பீ=ஆவின் பீ) - பசுச்சாணம். "ஆமுன் பகரவீ அனைத்தும்வரக் குறுகும்" (நன் - 177-சூ). தேவகுலம்-(குலம் - மனை - வீடு) - தேவர் இருக்கும் வீடு : ஆலயம்.

## மலசலமோசனம் செய்யும் திசை.

33. பகற்றெற்கு நோக்கார்; இராவடக்கு நோக்கார்.
பகற்பெய்யார் தீயினுள் நீர்.

(இ - ள்.) பகல் தெற்கு நோக்கார் இரா வடக்கு நோக்கார் - பகல் தெற்கு நோக்கியும் இரா வடக்கு நோக்கியும் இருந்து மூத்திர புரீடங்களைச் சோரார். பகல் தீயினுள் நீர் பெய்யார் - பகற்பொழுதின்கண் தீயினுள் நீர் பெய்யார்.

பகலில தெற்குநோக்கியும் இரவில் வடக்குநோக்கியும் இருந்து மலசலம் விடுத்தலாகாது. பகலில் நெருப்பிலே தண்ணீரை உகுத்தலாகாது.

34. பத்துத் திசையும் மனத்தான் மறைத்தபின்
அந்தரத் தல்லால் உமிவோ டிருபுலனும்
இந்திர தானம் பெறினும்-இகழாரே
தந்திரத்து வாழ்துமென் பார்.

(இ - ள்.) பத்துத்திசையும் மனத்தால் மறைத்த பின் - திசை பத்தினையும் மறைத்தாராக மனத்தால் கருதி, அந்தரத்து அல்லால் - பத்துத்திசையின் கண்ணும் இன்றி வேறோரிடத்தின் கண்ணே சோர்கின்றாராகக் கருதியல்லது, உமிவோடு இருபுலனும்- உமிநீரையும் மூத்திரபுரீடங்களையும், இந்திரதானம் பெறினும் - இந்திரன் உறையுமிடம் பெற்றாராயினும், இகழார் - சோரார், தந்திரத்து வாழ்தும் என்பார் - நூன்முறையால் ஒழுகுதும் என்பார். [ஏ - அசை.]

திசை பத்தையும் மறைத்ததாகப் பாவித்து அந்தரத்தில் செய்வதாக நினைத்துக்கொண்டு எச்சிலுமிழ்தலும் மலசலங் கழித்தலும் செய்க.

பிரயோகவிவேகம் 12-வது சூத்திர வுரையில் இவ்வெண்பாவின் முதலடி அகக்கரணத்துக்கு உதாரணமாகக் காட்டப்பெற்றிருக்கிறது.

வாய்பூசலாகாத இடங்கள்.

35. நடைவரவு நீரகத்து நின்றுவாய் பூசார் ;
வழிநிலை நீருள்ளும் பூசார் ; மனத்தால்
வரைந்துகொண் டல்லது பூசார் ; கலத்தினால்
பெய்பூச்சுச் சீரா தெனின்.

(இ - ள்.) நீரகத்து (நின்று) நடைவரவு நின்று வாய்பூசார் - நீரகத்தின்கணின்றும் நடவாநின்றும் தம்வாய் பூசார் ; வழிநிலை நீருள்ளும் பூசார் - ஓடுநீர் பெற்றிலராயின் நிலை நீருள்ளும் அப்பெற்றி பூசார். மனத்தால் வரைந்துகொண்டல்லது பூசார் - அந்நீர் அருந்தும் போதும் பூசும்போதும் மனத்தான் வரை

யறுத்துக்கொண்டல்லது பூசார்; கலத்தினல் பெய் பூச்சு சீராது எனின் - அதுவுஞ் செய்வது கலத்தான் முகந்து சிலர்பெய்யப் பூச முடியாதாயின்.

ஒரு பாத்திரத்தில் தண்ணீரை மொண்டே வா யலம்ப வேண்டும். தண்ணீரிலே நின்றுகொண்டும் நடந்துகொண்டும் வாயலம்புதல் ஆகாது.

ஓடு நீரிலும் நிலைநீரிலும் பூசார் என்று சொல்வதும் பொருந்தும். மனத்தால் வரைந்துகொள்ளலாவது, "பத்துத் திசையு மனத்தால் மறைத்தபின் அந்தரத்தல்லால்" என்ற படி பாவித்தல். பெய்பூச்சுத் தாரா தெனின்" என்றும் பாடம்.

அகற்றத்தக்க சில அநாசாரங்கள்.

36. சுடரிடைப் போகார்; சுவர்மேல் உமியார்;
இடரெனினும் மாசுணி கீழ்தம்மேற் கொள்ளார்;
படைவரினும் ஆடை வளியுரைப்பப் போகார்;
பலரிடை ஆடை உதிராரே; என்றும்
கடனறி காட்சி யவர்.

(இ - ள்.) சுடரிடை போகார் - ஒருவர்க்கும் விளக்கிற்கும் நடுவூடறுத்துப் போகார்; சுவர்மேல் உமியார்-சுவரின்மேல் உமியார்;இடர் எனினும்-தமக் குக் குளிரான் இடர் வரினும், மாசுணி-பிறர் உடுத்த மாசுணியை, தம்கீழ் மேல் கொள்ளார் - தங்கீழ்ப் படுப்பதும் மேற்போர்ப்பதும் செய்துகொள்ளார்; படைவரினும்-படை வந்ததாயினும், ஆடை வளி - தாமுடுத்த ஆடைக்காற்று, உரைப்ப போகார்-பிறர் மேல் உரைப்பப் போகார்; பலர் இடை ஆடை உதி

ரார் - பலர்நடுவண் நின்று உடையை உதறுார் ; என்றும் கடன்அறி காட்சியவர் - எஞ்ஞான்றும் கடப்பாட்டை அறிந்த அறிவுடையார். [ஏ - அசை.]

ஒருவர் உட்கார்ந்திருக்கின்ற இடத்திற்கும் விளக்கிற்கும் நடுவிலே போதலாகாது. சுவரின்மேல் எச்சிலை உமிதல் கூடாது. பிறர் உடுத்துக் கழித்தத அழுக்கு வஸ்திரத்தைக் கீழே போட்டுக்கொள்வதும் மேலேபோர்த்துக்கொள்வதும் ஆகாது. எப்படிப்பட்ட சமயத்திலும் தாம் உடுத்திருக்கின்ற வஸ்திரத்தின் காற்று மற்றவர்மேல் படும்படி செல்லுதல் கூடாது. பலர் நடுவிலே தாம் உடுத்திருக்கின்ற வஸ்திரத்தை உதறுதல் கூடாது.

"மாசுணி தங்கீழ்மேற் கொள்ளார்" என்றும் பாடம்.

நோக்கலாகாதன.

37. பிறர்மனை கட்களவு சூது கொலையோ
டறனறிந்தார் இவ்வைந்தும் நோக்கார், திறனில
ரென்னப் படுவதூஉ மன்றி நிரயத்துச் [ரென்
செல்வழி உய்த்திடுத லால்.

(இ - ள்.) பிறர்மனை கள் களவு சூது கொலையோடு இவ் வைந்தும் - பிறர்மனையாளும் கள்ளும் களவும் சூதும் கொலையும் என்ற இவ் வைந்தினையும், அறனறிந்தார் நோக்கார் - அறனறிந்தார் செய்வேமென்று கருதார், திறன் இலர் என்று எள்ளப்படுவதும் அன்றி - திறப்பாடிலரென்று பலரால் இகழப்படுதலு மன்றியே, நிரயத்து செல்வழி உய்த்திடுதலால் - நரகத்தின்கண் செல்லும் நெறியில் இவை செலுத்துதலான்.

இகழ்ச்சிக்கும் நரகத்திற்கும் காரணமாதலால், பிறருடைய மனையாளை விரும்புதல் - கள்ளுண்டல் - களவுசெய்தல் - சூதாடல் - கொலைசெய்தல் என்னும் இவைகளை மனத்தில் நினைத்தலும் ஆகாது.

"செல்வுழி உய்த்திடுதலான்" என்றும் பாடம்.

38 பொய்குறளை வெளவல் அழுக்கா றிவைநான்கும்
ஐயந்தீர் காட்சியார் சிந்தியார். சிந்திப்பின்
ஐயம் புகுவித் தருநிரயத் துய்த்திடும் :
தெய்வமுஞ் செற்று விடும்.

(இ - ள்.) பொய் - பொய்யும், குறளை - குறளையும், வெளவல் - பிறர் பொருளைத் தாம் வவ்வவேண்டும் காதலும், அழுக்காறு - பிறராக்கத்தின்கண் பொறாமையும், இவை நான்கும் - என இவை நான்கினையும், ஐயம் தீர் காட்சியார் - ஐயந்தீர்ந்த அறிவினையுடையார், சிந்தியார் - நினையார். சிந்திப்பின் - நினைப்பாராயின், ஐயம் புகுவித்து-பிச்சை புகுவித்து, அருநிரயத்து - நரகத்தின்கண்ணேயும், உய்த்திடும் - புகுவிக்கும்; தெய்வமும் செற்றுவிடும் - தெய்வமும்

பொய்வார்த்தை - கோள் சொல்லுதல் - பிறர்பொருளை வெளவ விரும்புதல் - பிறர் செல்வங்கண்டு பொறாமை என்கிற நான்கும், பிச்சையெடுக்கும்படி செய்வதோடு நரகத்துக்கும் காரணமாகும்: இவைகளை யுடையானைத் தெய்வமும் கெடுத்துவிடும். ஆதலால், இவைகளை மனத்தால் நினைத்தலும் ஆகாது.

## போசனக்கிரமத்தின் ஒழிபு.

39. தமக்கென் றுலேயேற்ருர்; தம்பொருட் டூன்கொள்
அடுக்களை எச்சிற் படாஅர்;* மனேப்பலி [ளார்;
ஊட்டினமை கண்டுண்க ஊண்.

(இ - ள்.) தமக்கென்று உலேயேற்ருர் - தமக்கென்று உலேயேற்ருர். தம்பொருட்டு ஊன் கொள்ளார் - தெய்வப் பொருட்டன்றித் தம் காரணத்தால் கொன்று. ஊனேக் கொள்ளார். அடுக்களை எச்சில் படார் - அட்டிலின்கண் எச்சிற்படுத்தார். மனேப்பலி ஊட்டினமை கண்டு ஊண் உண்க - மனேயுறை தெய்வங்கட்குப் பலியூட்டினமை அறிந்தபின்னேத் தாம் உண்க.

தமக்குமாத்திரம் ஆவதாக உலேவைத்தல் ஆகாது.(யாகாதி நிமித்தமாக வன்றித) தம்முடைய நிமித்தமாக ஓருயிரைக் கொன்று அதன் மாமிசத்தைக் கொள்ளலாகாது. மடைப்பள்ளியை எச்சிற்படுத்த லாகாது. வீட்டுத் தெய்வங்களுக்குத் திருவாராதனம் செய்த பிறகே உணவுசெய்தல் வேண்டும்.

பலி - தெய்வங்களுக் கிடும் உணவு.

40 உயர்ந்ததின் மேலிரார், உள்ளழிவு செய்யார்,
இறந்தின்ஞ செய்தக் கடைத்தும் குரவர்
இளங்கிளேகள் உண்ணு மிடத்து.

(இ - ள்.) இளங்கிளேகள் உண்ணுமிடத்து-தமக்கிளேய சுற்றத்தார் உண்ணுமிடத்து, குரவர் - குரவராயிஞர், உயர்ந்ததின்மேல் இரார்-உயர்ந்ததின்மேல் இரார்; உள்ளழிவு செய்யார்-இளங்கிளேகள் மனமழிவனவற்றையும் செய்யார்; இறந்து இன்ஞ செய்தக் கடைத்தும் - முறைமை கடந்து மற்றவ் விளங்கிளேகள் இன்ஞத செய்தகாலத்தும்.

சிறுவர்கள் உண்ணும்போது பெரியோர்கள் உயர்வான பீடத்தின்மேல் இருக்கலாகாது. சிறுவர்கள் செய்யத் தகாத குற்றம் செய்திருப்பினும், அவர்கள் உண்ணும்போது அவர்களை மனம் நோகும்படி யாதொன்றும் செய்தலாகாது.

உள்ளழிதற்குக் காரணமானதை உள்ளழிவு என்றார்.

## செய்வன தவிர்வன சில.

41\. கண்ணெச்சில் கண்ணூட்டார்; காலொடு கால்தே
புண்ணிய மாய தலையோ டுறுப்புறுத்த; [யார்;
நுண்ணிய நூலறிவி னார்.

(இ - ள்) கண்ணெச்சில் கண் ஊட்டார் - ஒருவன் தன் கண்ணிற்கு மருந்தெழுதிய கோல்கொண்டு அவ்வெச்சில் கழியாது தம் கண்ணிற்கு அம் மருந்து ஊட்டார். காலொடு கால் தேயார் - தம் காலொடு கால் தேயார். புண்ணியமாய - புண்ணியமாய பொருள்களை, தலையோடு உறுப்பு - தலையின் கண்ணும் மற்றை யுறுப்பின் கண்ணும், உறுத்த - உறுத்துக, நுண்ணிய நூல் அறிவினார் - நுண்ணிய நூலை உணர்வார்.

ஒருவர் கண்ணிற்கு மருந்தெழுதிய கோலைச் சுத்திசெய்யாமல் அதனால் தம்முடைய கண்ணிற்கு அம்மருந்தை ஊட்டுதலாகாது. காலொடு காலைத் தேயத்தலாகாது. புனிதமான பொருள்கள் கிடைப்பின் அவற்றைச் சிரசிலும் கண் முதலிய உறுப்புகளிலும் ஒற்றிக்கொள்க.

கண்ணெச்சில் - பிறரொருவருடைய கண்ணின் எச்சில். உறுத்த அகரவீற்று வியங்கோள். "நுண்ணிய நூலுணர்விஞர்" என்றும் பாடம்.

42. தீண்டாநாள் முந்நாளும் நோக்கார்: நீராடியபின்
ஈராறு நாளும் இகவற்க என்பதே
பேரறி வாளர் துணிவு.

(இ - ள்.) தீண்டாநாள் முந்நாளும் நோக்கார் - தம் மனைவியர்க்குப் பூப்பு நிகழ்ந்தால் மெய்யுறலாகாத நாள் மூன்றின்கண்ணும் அவரை நோக்கார்: நீராடியபின் ஈராறு நாளும் இகவற்க-நீராடிய பின்பு பன்னிரண்டு நாளும் அகலாதொழிக, என்பது-என்று சொல்லப்படுவது, பேரறிவாளர் துணிவு - பேரறிவாளர் துணிவு. [ஏ - அசை.]

மனைவியாக்கு மாதப்பூப்பு நிகழ்நதால மூன்றுநாளளவும் அவர் முகத்தைக் கணவன் காணுதலாகாது. மூன்றுநாளுங் கழிந்து தலைமுழுகினபின பன்னிரண்டு நாளளவும் அவரைப் பிரிதலாகாது.

“பூப்பின் புறப்பா டீராறு நாளும், நீத்தகன றுறையார் என்மனார் புலவர், பரத்தையிற் பிரிந்த காலை யான” எனபது தொல்காப்பியம் பொருளதிகாரம் 187 - வது சூத்திரம். அஃதாவது, பூப்புததோன்றிய மூன்று நாளும் கூட்டமின்றி அணுக இருநது அதன் பின்னர்ப பன்னிரண்டு நாளும் கூடியுறைப என்றதாம். பூப்புப் புறப்பட்ட ஞான்றும் மற்றை நாளும் கருத தங்கில் அது வயிற்றில் அழிதலும், மூன்றாநாள் தங்கில் அது சில்வாழ்க்கைத் தாதலும் பற்றி, முநநாளும் கூட்டமின்று என்றார். கூட்டமின்றியும் நீங்காதிருத்தலின், பரத்தையிற் பிரிந்தானெனத் தலைவிநெஞ்சத்துக் கொண்ட வருத்தம் அகலும். அகலவே அககரு மாட்சிமைப்படுமாயிற்று. இது மகப்பேற்றுக் காலத்துக்குரிய நிலைமை கூறிற்று.

இதனை அடியொற்றியே இலக்கணவிளக்க வாசிரியர் “பூத்த காலைப் புனையிழை மனைவியை, நீரா டியபின் ஈராறு

காளும்,கருவயிற் றுறாஉங் கால மாதலின், பிரியப் பெறுன் பரத்தையிற் பிரிவோன், (அகத்திணை-87-சூ) என்று கூறி, அதனுரையில் இவ் வெண்பாவை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

43. உச்சியம் போழ்தோ டிடையாமம் ஈரந்தி
மிக்க இருதேவர் நாளோ டுவாத்திதிநாள்
அட்டமியும் ஏனைப் பிறந்தநாள் இவ்வனைத்தும்
ஒட்டார் உடனுறைவின் கண்

(இ - ள்.) உச்சி அம்போழ்தோடு - உச்சியம் பொழுதும், இடையாமம் - நடுக்கங்குலும், ஈரந்தி - மாலையும் காலையும், மிக்க இருதேவர் நாளோடு-மிக்க இருதேவர் நாளாகிய ஆதிரையும் ஓணமும், உவாதிதி நாள் - உவாவும், அட்டமியும் - அட்டமியும், ஏனை பிறந்தநாள் - தாம் பிறந்தநாளும், இ அனைத்தும்-என இந் நாட்களின்கண், உடனுறைவின்கண் ஒட்டார் - தம் மனைவியரோடு உடனுறைவின்கண் நல்லார் உடன்படார்.

நடுப்பகலிலும் நள்ளிரவிலும் மாலையிலும் காலையிலும் திருவாதிரையிலும் திருவோணத்திலும் அமாவாசை பௌர்ணிமியிலும் அஷ்டமியிலும் பிறந்தநாளிலும் கலவிசெய்தல் ஆகாது.

மிக்க இரு தேவர் நாள் - சிவபெருமானுக்குரிய திருவாதிரையும் திருமாலுக்குரிய திருவோணமும். "பிறந்தநாள் இவ்வெட்டும்" என்றும் பாடம்.

44. நாழி மணைமேல் இரியார். மணைகவிழார்.
கோடி கலையுள் விரியார். கடைத்தலை
ஓராது கட்டிற் படாஅர். அறியாதார்
தந்தலைக்கண் நில்லா விடல்.

(இ - ள்.) நாழி மணைமேல் இரியார் - நாழியை மணைமேல் இருத்தார். மணை கவிழார் - மணையைக் கவிழ்த்தி வையார். கோடி கடையுள் விரியார் - புத்தாடையைத் தலைக்கடையின்கண் விரியார். கடைத்தலை ஓராது கட்டில் படார்-பலரும் புகுதும் கடைத்தலைக்கண் ஆராயாது கட்டில் படார். அறியாதார் தம் தலைக்கண் நிலலாவிடல் - தம்மை அறியாதார் முன்பு நில்லாதுவிடுக. [அல்லதூஉம் தம்மை யறியாதார் கடைக்கண் நில்லாது விடுக எனினுமாம்.]

அளக்கும் படியை மணைமேல் வைத்தலும், மணையைக் கவிழ்த்து வைத்தலும், புது வஸ்திரத்தைத் தலைக்கடையில் பிரித்தலும், தலைக்கடையில் கட்டிலிட்டுப் படுத்தலும் கூடா. தம்மை யறியாதா ரெதிரில் நிற்றலொழிக.

## கலியாணப் பந்தலின்கீழ்ப் பரப்பலாகாதவை.

45. துடைப்பம் துகட்காடு புல்லிதழ்ச் செத்தற்
கருங்கலம் கட்டில் கிழிந்ததனோ டைந்தும்
பரப்பற்க பந்த ரகத்து.

(இ - ள்.) துடைப்பம்-தூால சீக்கும் துடைப்பமும், துகள்காடு - துகளோடு கூடிய தூராலும், புல்லிதழ்-பூவின் புறவிதழும், செத்தல் கருங்கலம்-பழங் கருங்கலங்களும், கட்டில் கிழிந்ததனோடு - கிழிந்த கட்டிலும், ஐந்தும்-என இவ்வைந்தும், பந்தரகத்து - மணப்பந்தரின்கீழ், பரப்பற்க - பரப்பாதொழிக.

கலியாணப் பந்தலின் கீழே துடைப்பம்-செத்தை - பூவின் புறவிதழ் - பழைய கரிப்பானை - கிழிந்த கட்டில் என்னும் இவைகளைப் பரப்பலாகாது.

தூால்-செத்தை. செத்தல்- அறக்காய்தல்-பழமையாதல்,

## இற்கிழத்தியர் இல்லம்பொலியச் செய்வன

46. காட்டுக் களைந்து கலங்கழீஇ இல்லத்தை
ஆப்பிநீர் எங்குந் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்
தில்லம் பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்ல துறல்வேண்டு வார்.

(இ - ள்.) சிறுகாலை - சிறுகாலையே துயிலெழுந்து, காடு களைந்து-இல்லத்துள்ள துராலைக் களைந்து, கலம் கழீஇ - கருங்கலங்களைக் கழுவி, இல்லத்தை ஆப்பிநீர் எங்கும் தெளித்து - தம்மனை ஆப்பிநீராலே எங்கும் தெளித்து, நீர்ச்சால கரகம் நிறைய மலர் அணிந்து - நீர்ச்சாலையும் கரகத்தையும் நிறைய மலரணிந்து, இல்லம் பொலிய - இல்லத்துப் பொலியும் படி, அடுப்பினுள் தீ பெய்க - அடுப்பினுள் தீயுண்டாக்குக, நல்லது உறல வேண்டுவார் - நல்ல செல்வத்தை உறல் வேண்டுவார்.

நல்ல செல்வத்தை அடைய வேண்டுவோர், அதிகாலையில் எழுந்து வீட்டை விளக்கிப் பாத்திரங்களைக் கழுவி வீடுமுழுவதும் சாணநீர் தெளித்து நீர்ச்சால் கரகங்களை மலரணிந்து அதன் பின்பு அடுப்பினுள் தீயைமூட்டுதல் வேண்டும்.

காட்டுக்களைந்து - (காடு — களைந்து) - இரண்டாம் வேற்றுமைத் தொகை. காடு-செத்தை. “கடலொடு காட்டொட்டலில்” என்ற பழமொழியில் காடு என்பது இப்பொருளில் வருகின்றது. சிறுகாலை —பிராதக்காலம், உதயகாலம். “சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து” எனத் திருப்பாவையில் வருகின்றது.

## வேதாத்தியயனம் செய்யலாகாத நாள்கள்.

47. அட்டமியும் ஏனை யுவாவும் பதினான்கும்
அப்பூமி காப்பார்க் குறுகண்ணும் மிக்க
நிலத்துளக்கு விண்ணதிர்ப்பு வாலாமை பார்ப்
இலங்குநூல் ஓதாத நாள். [பார்

(இ - ள்.) அட்டமியும் - அட்டமிநாளும், ஏனை உவாவும் - உவாநாளும், பதினான்கும் - பதினான்கும், அ பூமி காப்பார்க்கு உறுகண்ணும் - தாமுறையும் பூமி காக்கும் அரசர்க்கு உறுகண் உள்ள நாளும், விண்ணதிர்ப்பு - விண்ணதிர்ப்புள்ள நாளும், வாலாமை - தமக்குத் தூய்மை போதாத நாளும், (என இந்நாள்கள்), பார்ப்பார் இலங்குநூல் ஓதாத நாள் - பார்ப்பார் வேதம் ஓதாத நாள்கள்.

அஷ்டமி அமாவாசை பௌர்ணிமி சதுர்த்தசி அரசாக் காபத்துக்காலம் பூகம்பம் இடிமுழக்கம் அசுபம என்னுமிவை வேதாத்தியயனம் செய்யலாகாத நாள்கள்.

அ - சிறப்புப பற்றி வந்த சுட்டு: பண்டறிசுட்டு உலகறி சுட்டு என்றும் வழங்கப் பெறும்.

"உருமுமண் வாரி உற்கைவீழ்ந் திடுநாள் சுழல்வளி உற்ற நாள் ஓர்பால், எரிபடு நாளில் அரையிருட் போதில் பின்னவா இருந்திடு மிடத்தில், அரசருற் றிடையூ றுற்றுழி அவர்கட் கசு பம்வந் துற்றிடுநாளில், மருவிய பதினான் கிருவா நந்தை அட்டமி ஓதல்மாண் பன்றே" [நந்தை - பிரதமை - சஷ்டி - ஏகாதசி ]—காசிகண்டம்.

### அறஞ்செய்தற்கும் விருந்திடுதற்கும் உரிய நாள்கள்.

48. கல்லியாணம் தேவர் பிதிர்விழா வேள்வியென்
றைவகை நாளும் இகழா தறஞ்செய்க;
பெய்க விருந்திற்குங் கூழ்.

(இ - ள்.) கலலியாணம் (நாள்) - தான் செய்யும் கல்லியாண நாளின் கண்ணும், தேவர் (நாள்) - தேவர்க்குச் சிறப்புநாளின் கண்ணும், பிதிர் (நாள்)-பிதிரர்களுக்குச் சிறப்புச் செய்யும் நாளின்கண்ணும், விழா (நாள்)-விழாநாளின்கண்ணும், வேள்வி (நாள்)-யாகம் செய்யும் நாளின்கண்ணும், என்ற ஐவகை நாளும் - என்ற ஐந்துவகைப்பட்ட காலத்தும், இகழாது - இகழாதே, அறம் செய்க - கொடையறம் செய்க. விருந்திற்கும் கூழ் பெய்க - விருந்தினர்க்கும் சோறிடுக.

கல்யாண நாளிலும-தேவர்க்குச் சிறபபான நாளிலும் - பிதிரர்களுக்குச் சிறப்புச் செய்யும் நாளிலும் - திருவிழா நாளிலும்-யாகம் செய்யும் நாளிலும் தானஞ்செய்வதுடனே விருந்தினர்க்குச் சோறிடுக.

### இன்னதற்குத் தக இன்னது செய்தல்.

49. உடைநடை சொற்சோர்வு வைதலிந் நான்கும்
நிலைமைக்கும் கல்விக்கும் ஆண்மைக்கும் தத்தம்
குடிமைக்கும் தக்க செயல்.

(இ - ள்.) உடை நடை சொற்சோர்வு வைதல் இ நான்கும் - உடையும் நடையும் சொற்சோர்வும் வைதலும் என இந்நான்கும், தத்தம் நிலைமைக்கும் -

தாம் அரசனுல் சிறப்புப் பெற்றமைக்கும், தத்தம் கல்விக்கும் - தம் கல்விக்கும், தத்தம் ஆண்மைக்கும்- தம் ஆண்மைக்கும், தத்தம் குடிமைக்கும்-தம் குடிப் பிறப்பிற்கும், தக்க செயல்-தக்க தகுதியாகச் செய்க.

உடுக்கும் உடை - நடக்கும நடை - சொல் இழுக்குதல் - திட்டுதல் என்னும் நான்கையும் தங்கள் தங்களுடைய நிலைமைக்கும் கல்விக்கும் ஆண்மைக்கும் குடிப்பிறப்பிற்கும் தகுந்தபடி செய்க.

"சொற் செலவு" என்றும் பாடம்.

## தவிர்வன சில.

50. பழியார் இழியார்; பலருள் உறங்கார்;
இசையாத நேர்ந்து கரவார்; இசைவின்றி
இல்லாரை எள்ளி இகழ்ந்துரையார்; தள்ளியும்
தாங்கருங் கேள்வி யவர்.

(இ - ள்.) (பலருள்) பழியார் இழியார் - பலர் நடுவண் இருந்து பிறரைப் பழித்துரையார் இழித்துரையார். பலருள் உறங்கார் - பலர் நடுவண் உறங்கார். இசையாத நேர்ந்து கரவார் - தமக்குச் செய்யப் பொருந்தாதவற்றைப் பிறர்க்குச் செய்கின்றேமென்று உடம்பட்டுச் செய்யாதொழியார். இசைவு இன்றி இல்லாரை எள்ளி இகழ்ந்து உரையார்-தகுதியின்றி வறியாரை இகழ்ந்து முறைமைகடந்து உரையார்; தாங்கருங் கேள்வியவர் தள்ளியும் - பிறரால் மாறுபடற்கரிய கேள்வியார் இறந்தும்.

நல்ல கேள்விச்செல்வ முடையவர், பலர் நடுவிலிருந்து பிறரைப் பழித்தும் இழித்தும் பேசார; பலர் நடுவில் படுத்து நித்திரைசெய்யார்; தம்மாலாகாத காரியத்தைச் செய்வதாக ஒருவருக்கு வாக்கிட்டுப் பின்பு அதனைச் செய்யாமலிரார்; ஏழைகளைத் தகுதியில்லாமல் இகழ்ந்து பேசார்.

## தம்மொளி கெடுப்பன.

51. மின்னொளியும் வீழ்மீனும் வேசையர்கள் கோலமும்
தம்மொளி வேண்டுவார நோக்கார். பகற்கிழவோன்
முன்னொளியும் பின்னொளியும் அற்று.

(இ - ள்) மின்னொளியும் வீழ்மீனும் வேசையர்கள் கோலமும் - மின்னொளியையும் வீழ்மீனையும் வேசையர்கள் கோலத்தையும், தம் ஒளி வேண்டுவார் - தமது விளக்கத்தை வேண்டுவார், நோக்கார் - நோக்கார். பகற்கிழவோன் - பகற்கிழவோனுடைய, முன்னொளியும் - காலை யொளியையும், பின்னொளியும் - மாலை யொளியையும், அற்று - அப்பெற்றியே நோக்கார்.

' நம்முடைய தேககாந்தி கெடாதிருக்க வேண்டுகின்றவர்கள், மின்னல் - எரிநக்ஷத்திரம்-வேசையருடைய அலங்காரம்-காலை வெய்யில் - மாலை வெய்யில் என்னும் இவைகளை உற்றுப் பார்த்தல் கூடாது.

பகற் கிழவோன் - (பகல் - பகற்பொழுது. கிழவோன் - உரியவன்) - பகற்பொழுதுக்கு உரியவன் - சூரியன். அற்று - அத்தன்மையது: குறிப்புமுற்று. (அற்று) ஆதலால் அவற்றையும் நோக்கார் என்பது குறிப்பெச்சம்.

## உரைக்கலாகாத வார்த்தைகளின் வரையறை.

52. படிறும் பயனிலவும் பட்டி யுரையும்
வசையும் புறனும் உரையாரே என்றும்
அசையாத உள்ளத் தவர்.

(இ - ள்.) படிறும் - வஞ்சனையுரையும், பயனில வும் - பயன்படாத உரையும், பட்டி உரையும் - வாய் காவது வேண்டிய உரைக்கும் உரையும், வசையும் - பிறரைப் பழியுரைக்கும் உரையும், புறனும்-காணாத வழிப் பிறரை இகழ்ந்துரைக்கும் உரையும், உரை யாரே-இவை யாதும் சொல்லார், என்றும் அசையாத உள்ளத்தவர் - என்றும் தளராத உள்ளத்தவர்.

வஞ்சனை வார்த்தை - பயனில்லாத சொல் - நாவடக்க மின்றி வேண்டியவற்றைச் சொல்லும் சொல் - பழிச்சொல் - புறணி என்னும் இவைகளை ஒழிததல் வேண்டும்.

"பட்டியுரையாம் வசையும்" என்றும் பாடம்.

## பயிற்றலாகாத பழிச்செயல்கள்.

53. தெறியொடு கல்லேறு வீளை விளியே
விகிர்தம் கதங்கரத்தல் கைபுடை தோன்ற
உறுப்புச் செகுத்தலோ டின்னவை யெல்லாம்
பயிற்றார் நெறிப்பட் டவர்.

(இ - ள்.) தெறியொடு-தெறித்தலும், கல்லேறு-கல்லெறிதலும், வீளை-வீளைசெய்தலும், விளி-தூரப் போகின்றா னொருவனை அழைத்தலும், விகிர்தம் - ஒருவன் செய்கை சொல் முதலாயினவற்றைத் தானும் அவ்வகை இகழ்ந்து செய்துகாட்டலும், கதம் - வேக முடையனாதலும், கரத்தல் - ஒளித்தலும், கைபுடை-

கையோடு கைபுடைத்தலும், தோன்ற உறுப்பு செகுத்தலோடு - பிறர்க்கு வெளிப்படக் கண்ணிடுதல் முதலாயின செய்து தன்னுறுப்பைச் செகுத்தலும், இன்னவை எல்லாம் - இப் பெற்றிப்பட்டவை யெல்லாம், பயிற்றார்-பயின்று செய்யார், நெறிப்பட்டவர்-வழிப்பட்டார். [வீளைசெய்தல் - கனைத்தல் முதலியன செய்தல்].

ஒரு பொருளை விசிறியெறிதல் - கல்லெறிதல் - வீளை செய்தல் - தூரப்போகின்றவனை அழைத்தல் - பிறருடைய சொல் செய்கைகளை நடித்துக்காட்டல் - வேகமுடையனாதல் - ஒளித்துக்கொள்ளல் - கையொடு கையைத தட்டுதல் - வெளிப்படையாகக் கண்ணிடுதல் மூக்கசைத்தல் முதலிய அங்க சேஷ்டை என்றாற் போன்றவற்றைச் செய்துபழகுதலாகாது.

## விருந்தினர்க்குச் செய்யும் உபசாரம்.

54. முறுவல் இனிதுரை காலீர் மணைபாய்
கிடக்கையோ டிவ்வைந்துமென்ப தலைச்சென்றாக்
கூட்டுணைடு செய்யுஞ் சிறப்பு.

(இ - ள்.) முறுவல் இனிதுரை - முறுவலோடு கூடிய இனிதுரையும், காலீர் - காலகழுவ நீரும், மணை - இருக்க மணையும், பாய் - கிடக்கப் பாயும், கிடக்கையோடு - கிடக்கும் இடமும், இவ்வைந்தும் - என இவ்வைந்தும், என்ப - என்று சொல்லுப, தலைசென்றார்க்கு - தம்மிடத்துச் சென்றார்க்கு, ஊணொடு செய்யும் சிறப்பு-உணவுடனே செய்யும் சிறப்புக்கள்.

தம்மை நாடிவருகின்ற விருந்தினர்க்குச் சோறிடுதலுடனே செய்யத்தக்க சிறப்புக்களாவன, இனியமுகத்துடனே

இனியசொல் லுரைத்தல் - கால்கழுவ நீர்தரல் - இருக்க மணை கொடுத்தல் - படுக்கப் பாய்கொடுத்தல் - படுக்க இடங்காட்டுதல் என்பனவாம்.

விருந்தின னாக ஒருவன்வந் தெதிரின்
வியத்தல்நன் மொழியினி துரைத்தல்
திருந்துற நோக்கல் வருகென வுரைத்தல்
எழுதல்முன் மகிழ்வன செப்பல்
பொருந்துமற் றவன்றன் அருகுற விருத்தல்
போமெனிற் பின்செல்வ தாதல்
பரிந்துநன் முகமன் வழங்கலிவ் வொன்பான்
ஒழுக்கமும் வழிபடு பண்பே.

தவிசுதாள் விளக்கப் புனல்தமக் கியன்ற
அடிசில்பூந் தண்மலர்ப பாயல்
உவகையின் உறையும் இடனறுங் காதெண்ணீர்
ஒண்சுடர் எண்ணெய்வெள் ளிலைகாய்
இவைகளொன் பதுந்தன் மனைவயின் அடைந்தோர்
மகிழ்வுற இனிதினில் அளித்தல்
நவையற இல்வாழ் வடைந்துளோன் பூண்ட
கடனென நான்மறை நவின்ற.—காசிகண்டம்.

## நெடுநேரம் நிற்றலாகாத இடங்கள்.

55. கறுத்த பகைமுனையும், கள்ளாட்டுக் கண்ணும்,
நிறுத்த மனமில்லார் சேரி யகத்தும்,
குணநோக்கிக் கொண்டவர் கோள்விட் டுழியும்,
நிகரில் அறிவினர் வேண்டார், பலர்தொகு
நீர்க்கரையு நீடு நிலை.

(இ - ள்.) கறுத்த பகைமுனையும் - வெகுண்ட பகைமுனையின் கண்ணும், கள்ளாட்டுக்கண்ணும் -

கள்ளால் களித்தாடு மிடத்தும், நிறுத்த மனம் இல்லார் சேரி அகத்தும்-பொதுமகளிர் சேரிக்கண்ணும், குணம் நோக்கி கொண்டவர் கோள் விட்ட உழியும்-தங்குணங்களை ஆராய்ந்து தம்மை விரும்பிக்கொண்டார் கோட்பாடு விட்ட விடத்தும், பலர் தொகு நீர்க்கரையும் - பலர்தொகு நீர்க்கரையிடத்தும், நீடு நிலை - நெடிதாக நிற்கையை, நிகரில் அறிவினர் - ஒப்பில்லாத அறிவினையுடையார், வேண்டார்-விரும்பார்.

உக்கிரமாகச் சண்டைசெய்கின்ற இடத்திலும், கள்குடித்துக் களித்தாடுகின்ற இடத்திலும், பரத்தையர் சேரியிலும், சினேகம் தளர்ந்த விடத்தும், அநேகர் வருவது போவதான தண்ணீர்த்துறையிலும் நெடுநேரம் தங்கியிருப்பது தகுதியன்று.

நிறுத்த - ஒருவழியில் நிறுத்த, ஒரு புருஷனிடத்தில் நிறுத்த. சேரி - (சேர்+இ) - சேர்ந்திருக்குமிடம்

## தவிர்வன சில.

56\. முளிபுல்லும் கானமும் சேரார்,தீக் கூட்டார்.
துளிவிழக் கால்பரப்பி ஓடார். தெளிவிலாக்
கானம் தமியர் இயங்கார். துளியஃகி
நல்குர வாற்றப் பெருகினும் செய்யாரே
தொல்வரவிற் றீர்ந்த தொழில்.

(இ - ள்.) முளிபுல்லும் - முற்றிய புல்லின்கண்ணும், (முளி) கானமும்-முற்றிய காட்டின் கண்ணும், சேரார் - சேர்ந்திரார். தீக்கு ஊட்டார் - அவற்றைத் தீக்கு உணவாக ஊட்டார். துளி விழ கால் பரப்பி ஓடார் - மழை பெய்யாநிற்கக் காலைப் பரப்பி ஓடார்.

தெளிவு இலா கானம் தமியர் இயங்கார் - தேறமுடியாத காட்டுள் தமியராய்ப் போகார். துளி அஃகி - மழை குறைந்து பெய்யாதொழிதலால், நலகுரவு ஆற்ற பெருகினும் - வறுமை மிகப்பெரிதாயிற் றாயினும், தொல்வரவில் தீர்ந்த தொழில் - தம் குடியொழுக்கத்தை நீங்கிய தொழில்களை, செய்யார் - செய்யார்.

முற்றிய புல இருக்கின்ற இடத்திலும் முதிர்ந்த காடுள்ள இடத்திலும் சேர்ந்திருத்தலும், அவைகளைத் தீயிட்டுக்கொளுத்தலும், மழை பெய்யும்போது காலைப் பரப்பி ஓடுதலும், வழி துறை தெரியாத காட்டில் தனியாகப் போதலும், மழையின்றிக் காலங்கெட்டாலும் குடியொழுக்கம் தப்பி நடப்பதும் கூடா.

முளிதல் - காய்தல், வறத்தல். ஆகவே முளி யென்பது முதிர்வைக் குறித்துநின்றது.

## ஆரோக்கியம் வேண்டுவோர் செய்யலாகாதன.

57. பாழ்மனையும், தேவ குலனும், சுடுகாடும்,
ஊரில் வழியெழுந்த ஒற்றை முதுமரனும்,
தாமே தமியர் புகாஅர்; பகல்வளரார்;
நோயின்மை வேண்டு பவர்.

(இ - ள்.) பாழ்மனையும் - குடியில்லாத மனையகத்தும், தேவகுலனும் - தேவாலயங்களுக்குள்ளும், சுடுகாடும் - சுடுகாட்டுள்ளும், ஊர் இல்வழி எழுந்த ஒற்றை முதுமரனும் - ஊரில்லாத விடத்து உளதாயின தனி முதுமரத்தின் கண்ணும், தாமே தமியர் புகார் - அறிவின்றித் துணையோடல்லது தாமே போ

கார் : பகல் வளரார் - பகல் உறங்கார், நோயின்மை வேண்டுபவர் - நோயின்மை வேண்டுபவர்.

குடியில்லாத வீட்டிலும், கோயிலினுள்ளும், சுடுகாட்டி னுள்ளும், ஊரில்லாத விடத்துள்ள ஒன்றியான பழைய மரத் தினிடத்தும் துணையின்றித் தனியே போதலாகாது: பகலில் நித்திரை செய்தலாகாது. இவையெல்லாம் நோய் உண்டாவ தற்கு ஏதுவாம்.

முதுமரம் ஆலமரமுமாம.

## பிறர் எழுந்து ஓரிடம் செல்கையில் ஒருவர் செய்யலாகாதவை.

58. எழுச்சிக்கண் பிற்கூவார், தும்மார், வழுக்கியும்
எங்குற்றுச் சேறிரோ என்னூரே. முன்புக்
கெதிர்முகமா நின்றும் உரையார்: இருசார்வும்.
கொள்வர் குரவர் வலம்.

(இ - ள்.) எழுச்சிக்கண்-பிறர் எழுந்துபோகத் தொடங்கினபொழுது, பின் கூவார் - அவரைப் பின்னே நின்று அழையார்; தும்மார் - அப்பொழுது தும்முவதும் செய்யார்; வழுக்கியும் - மறந்தும், எங் குற்று சேறிர் என்னூர் - எங்குப் போகிறீர் என்று சொல்லார். முன்புக்கு - முன்னே புக்கு, எதிர்முக மாக நின்றும் - எதிர்முகமாக நின்றும், உரையார் - ஒன்றைச் சொல்லார். இருசார்வும்(நின்றுரைப்பர்)- அவர்க்கு இருமருங்கும் நின்று சொல்வார். குரவர் வலங்கொள்வர் - தங்குரவர் போம்பொழுது வலங் கொண்டுபோக. [ஓ. ஏ - அசை]

ஒருவர் எழுந்து போகும்போது, அவரை அழைத்தலும், தும்முவதும், எங்கே போகிறீர் என்று கேட்டலும் கூடா.

அங்ஙனம் அவர் போகும்போது அவருக்குமுன்னே போய் எதிர்முகமாக நின்று ஒன்றைச் சொல்லாமல அவர் பக்கத்தில் நின்றுகொண்டு அதனைச் சொல்க. பெரியார் போகும்போது அவரை வலங்கொண்டு போக.

(இரு சார்வும்) நின்றுரைப்பர் என்பது இசையெச்சம்.

## தவிர்வன சில.

59. உடம்புநன் றென்றுரையார். ஊதார் விளக்கு.
அடுப்பினுள் தீநந்தக் கொள்ளார். அதனைப்
படக்காயார் தம்மேல் குறித்து.

(இ - ள்.) உடம்பு நன்று என்று உரையார் - பிறரைப் பார்த்து உடம்பு நன்றாயிருந்த தென்று சொல்லார். விளக்கும் ஊதார் - விளக்கினையும் வாயால் ஊதி அவியார். அடுப்பினுள் தீ நந்தக்கொள்ளார் - அட்டிலடுப்பின்கண் நெருப்பு அவியச் செய்யார். அதனை தம்மேல் பட குறித்து காயார் - அந் நெருப்பின் சுடர் தம்மேல பட்க குளிர்கெடக் காயார்.

ஒருவரைப் பார்தது உம்முடைய உடம்பு நன்றாயிருக்கிற தென்று சொல்லலாகாது. விளக்கினை வாயினால் ஊதி அவித்தல் கூடாது. அடுப்பிலுள்ள நெருப்பை அவித்தல் கூடாது. அடுப்பிலுள்ள நெருப்பின் சுடா தம்மீது படும்விதம் குளிர் காய்தல் கூடாது.

## பெரியோருடன் வழிச்செல்லும் ஒழுக்கம்.

60. யாதொன்றும் ஏறூர் செருப்பு;வெயில்மறையார்
ஆன்றவிந்த மூத்த விழுமியார் தம்மோடங்
கோராறு செல்லும் இடத்து.

(இ - ள்.) யாதொன்றும் ஏறார் - யாதொன்றும் ஏறிப்போகார்; செருப்பு (ஏறார்) - செருப்புத் தொடார்; வெயில் மறையார் - ஒன்றனால் பிறர் தம்மேல் வெயில் மறைக்கப் போகார்; ஆன்று அவிந்த மூத்த விழுமியார் தம்மோடு ஓர் ஆறு செல்லும் இடத்து - ஆன்றவிந்த மூத்த விழுமியார் தம்முடன் கூட வழி போமிடத்து. [அங்கு - அசை]

பெரியோர் தம்முடனே வழிநடந்து வரும்போது வாகன முதலியவற்றில் ஏறிப்போதல் கூடாது; காலில் செருப்பைத் தொடுத்துச் செல்லுதல் கூடாது; குடை முதலியவற்றைப் பிடிப்பித்துக்கொண்டு போகலாகாது.

ஆன்று - அகன்று என்பதன் மரூஉ. "ஆனறமைந்த" என்றும் பாடம்.

அந்தணரைக் குரவர்போல் கொண்டொழுகல்.

61. வான்முறை யான்வந்த நான்மறை யாளரை
மேன்முறைப் பாற்றம்குரவரைப்போலொழுகல்
நான்முறை யாளர் துணிவு.

(இ - ள்.) வால் முறையான் வந்த நால் மறையாளரை - வாலிய முறையான் வந்த நான்மறையாளரை, மேல்முறை பால் - மேலாகிய முறைமைத் தன்மையை யுடைய, தம் குரவரை போல் ஒழுகல் - தம் குரவரைப்போல் கொண்டு ஒழுகுதல், நால் முறையாளர் துணிவு - நான்முறையாளர் துணிவு.

நன் மரபைச் சேர்ந்த பிராமணரைத் தம்முடைய குரவரைப்போல் பாவிக்க செய்யவேண்டும் என்பது சாஸ்திர மறிந்த பெரியாரது அபிப்பிராயம்.

## குரவர்க்குச் செய்யும் ஆசாரம்.

62. கால்வாய்த் தொழுவு சமயம் எழுந்திருப்
பாசாரம் என்ப குரவர்க் கிவை.இவை
சாரத்தால் சொல்லிய மூன்று.

(இ - ள்.) கால்வாய் தொழுவு - காலின்கண் தொழுதலும், சமயம் - அவர் நன்று என்ற சமயத் தின்கண் நிற்றலும், எழுந்திருப்பு - அவரைக் கண் டால் எழுந்திருத்தலும், இவை - என இவை, குர வர்க்கு ஆசாரம் என்ப - குரவர்க்குச் செய்யும் ஆசா ரம் என்று சொல்லுவர் நல்லார். சாரத்தால் சொல் லிய இவை மூன்று - குரவர்க்குச் செய்யும் ஆசாரம் பலவற்றுள்ளும் சாரத்தால் சொல்லப்பட்டன இம் மூன்றுமாம்.

குரவர்களுக்குச் செய்யத்தகும் சிறந்த ஆசாரங்கள் மூன் றுவன :—அவரைச் சாட்டாங்கமாக நமஸ்கரித்தல்-அங்ஙனம் நமஸ்கரிக்கும்போது அவர்கள் 'நல்லது எழுந்திரு' என்ற போது எழுந்திருததல்-அவர்களைக் கண்டவுடனே எழுந்திருத் தல் என்பன.

கால்வாய் என்பதில் வாய் ஏழாம் வேற்றுமை யுருபு.

63. துறந்தாரைப் பேணலும் நாணலும்தாம் கற்ற
மறந்தும் குரவர்முன் சொல்லாமை மூன்றும்
மங்கண்டார் கண்ட

(இ - ள்.) துறந்தாரை பேணலும் - அருந்தவ ரைப் பாதுகாத்தலும், நாணலும் - பழிநாணலும்,

தாம் கற்ற குரவர்முன் மறந்தும் சொல்லாமை-தாம் கற்றவற்றைக் குரவர்முன் மறந்தாயினும் சொல்லாமையும், மூன்றும்-என இம்மூன்றும், திறம் கண்டார் கண்ட நெறி - திறப்பட அறிந்தார் அறிந்த நெறி.

துறவிகளைப் பாதுகாத்தல் வேண்டும். பழிபாவங்களுக்கு அஞ்சுதல் வேண்டும். தாம் கற்ற திறத்தைத் தமது குரவர் முன்னே எடுத்துச் சொல்லுதல் தகுதியன்று.

நாணலும் என்னுமிடத்தில் பழி என்பது சொல்லெச்சம்.

64. பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கட்
காற்ற வழிவிலங்கி னாரே பிறப்பினுள்
போற்றி எனப்படு வார்.

(இ - ள்). பார்ப்பார் - பார்ப்பாரும், தவர்-தவசியரும், சுமந்தார் - சுமந்தாரும், பிணிப்பட்டார் - பிணிப்பட்டாரும், மூத்தார் - மூத்தாரும், இளையார் - பிள்ளைகளும், பசு - பசுக்களும், பெண்டிர் - பெண்டிரும், என்ற இவர்கட்கு - என்று சொல்லப்பட்ட இவர்க்கு, ஆற்ற வழி விலங்கினாரே - மிகவும் வழி கொடுத்து விலங்கிப் போயினாரே, பிறப்பினுள்-தாம் பிறந்த பிறப்புத்தோறும், போற்றி எனப்படுவார் - பிறரால் போற்றி என்று சொல்லப்படுவார்.

பார்ப்பார்-தவசியர்-சுமையுடையவர் - நோயாளர் - பாலியர் - பசுக்கள் - பெண்டிர் என்னும் இவர்களைக் கண்டால் வழி விட்டு விலகிச் செல்பவரே ஒவ்வொரு பிறப்பிலும் போற்றி என்று சொல்லப்படுவார்.

போற்றி - துதிக்கப்படுவது துதிக்கப்படுபவர் எனப் பொருள் கொள்ளும்: இதில் இ செயப்படுபொருள் விகுதி, ஊருணி எனபதிற்போல. வாழிய என்பது வாழி என வந்தாற் போல வந்த வியங்கோள் எனக்கொண்டு, காக்க எனப் பொருள் கூறுவதும் பொருந்தும். "பிறப்பிடை" என்றும் பாடம்.

இச்செய்யுள், இரு திணையுங் கலந்து மிகுதியால் உயாதிணை முடிபைப் பெற்றுவருவதற்கு, நன்னூல் 378-கு "திணை பால் பொருள்பல விரவின சிறப்பினும், மிகவினும் இழிபினும் ஒருமுடி பினவே" என்பதின் உரையில் உதாரணமாகக் காட்டப்பெற்றிருக்கிறது. இலக்கண விளக்கத்திலும் 298-வது சூத்திர வுரையில் காட்டப்பெறறிருக்கிறது.

## மனையாளன்றி மற்ற மங்கையருடன் நக்க லாகாமை.

65. ஈன்றாள் மகள்தன் னுடன்பிறந்தாள் ஆயினும்
சான்றோர் தமித்தா உறையற்க, ஐம்புலனும்
தாங்கற் கரிதாக லான்.

(இ - ள்.) ஈன்றாள் (ஆயினும்) மகள் (ஆயினும்) தன்னுடன் பிறந்தாள் ஆயினும்-தாயுடனாயினும் மகளுடனாயினும் தம்முடன்பிறந்தாளுடனாயினும், சான்றோர் - பெரியராயினோர், தமித்தாக உறையற்க - தனித்தாக உறையார், ஐம்புலனும் தாங்கற்கு அரிதாகலான் - ஐம்புலன்களையும் தடுக்க அரிதாகலான்.

ஐம்புலன்களையும் அடக்கி நடப்பது அருமையாகையால், தாய் மகள் உடன்பிறந்தாள் என்பவரோடும் தனியாக வசித்தலாகாது.

"கற்றாய் புதல்வி யுடன்றோன்றிய நங்கையேனும், உற்றோ ருழியிற் றனியெய்தி யுறைதலாகா"—காசிகண்டம்.

## இராசசேவையில் தவிர்வனவான செயல்கள்.

66. கடைவிலக்கிற் காயார் : கழிகிழமை செய்யார் :
கொடையளிக்கண் பொச்சாவார் : கோலம்நேர் செய்யார் :
இடையறுத்துப் போகிப் பிறனொருவற் சேரார் :
கடைபோக வாழ்துமென் பார்.

(இ - ள்.) கடை விலக்கின் காயார்-அரசர் வாயிலின்கண் தடை உண்டானால் வெகுண்டுகாயார் : கழிகிழமைசெய்யார்-அரசரோடு மிகக் கிழமையை அவர் பொறாதவகை செய்யார். கொடை (க்கண்) அளிக்கண் பொச்சாவார் - அவர் தமக்கு ஒன்று உதவுமிடத்தும் தம்மைத் தலையளிக்குமிடத்தும் தமக்கு அவை அமையாவென்று இகழார். கோலம் நேர் செய்யார்-அரசரொக்கக் கோலஞ்செய்யார். இடையறுத்து போகி பிறனொருவன் சேரார் - அரசரிருந்த அவையின்கண் ஊடறுத்துப் போகிப் பிறனொருவனைச் சேர்ந்திரார் : கடைபோக வாழ்தும் என்பார் - முன்புபோலப் பின் கடைபோக வாழ்துமென்று கருதுவார்.

அரசருடைய வாயிலின்கண் செல்லத் தடையுண்டானால் கோபித்தலும், அரசருடன் அதிக சொந்தம் பாராட்டுவதும், அரசர் தமக்கு வெகுமானஞ் செய்யுமிடத்தும் சம்மானஞ் செய்யுமிடத்தும் அவை தமக்கு அமையாவென் றிகழ்தலும், அரசருக்குச் சமானமாகத் தம்மை அலங்கரித்துக்கொள்வதும், இராச சபையில் ஊடறுத்துப் போய் வேறொருவனைச் சேர்ந்திருப்பதும் கெடுதி தருவனவாம்.

கடை - கடைசியிடம் - வீடு முதலியவற்றின் கடைசியிடம் என்ற பொருளாய் வாயிலைக் குறிப்பதாயிற்று. முன் பக்கவாயில் தலைக்கடை எனவும், பின்பக்கவாயில் புறக்கடை எனவும் வழங்கும். அளி - அருளினால் செய்யப்படுவது. பொச்சாவார் - மறவார் : தம் நிலையை மறந்து இகழார். கடைபோக - முடிவுகாலமட்டில், ஆயுள் முழுவதும்.

67. தமக்குற்ற கட்டுரையும், தம்மிற் பெரியார்
உரைத்ததற் குற்ற உரையும், அஃதன்றிப்
பிறர்க்குற்ற கட்டுரையும் சொல்லற்க.சொல்லின்
வடுக்குற்றம் ஆகி விடும்.

(இ - ள்.) தமக்கு உற்ற கட்டுரையும் - தமக்குற்ற கட்டுரைகளும், தம்மிற் பெரியார் உரைத்ததற்கு உற்ற உரையும் - தம்மிற் பெரியனாக அரசனாற் சிறப்புப்பட்டார் உரைத்த உரைகளும், அஃதன்றி - அஃதன்றியே, பிறர்க்கு உற்ற கட்டுரையும்-பிறர்க்கு உறுதியாகிய கட்டுரைகளும், சொல்லற்க - அரசருக்குச் சொல்லற்க, சொல்லின்-சொல்லுவராயின், வடுகுற்றம் ஆகிவிடும் - தமக்கு வடுப்படும் குற்றமாம்.

தமக்குப் பொருந்தின உறுதிச் சொல்லையும், அரசனால் மிகச் சிறப்படைந்தவர் சொல்லிய வார்த்தைகளையும், அதுவு மன்றிப் பிறர்க்கு உறுதியாகிய கட்டுரைகளையும் அரசரிடத்தில் சொல்லுதல் ஆகாது. சொல்வது தமக்குக் கெடுதிதரும் குற்றமாக முடியும்.

68. பெரியார் உவப்பன தாமுவவார். இல்லம்
யாரைக் கொண்டு புகாஅர்.—அறிவறியாப்
பின்னையே யாளும் இழித்துரையார், தம்மோ
டளவளா வில்லா விடத்து.

(இ - ள்.) பெரியார் உவப்பன தாம் உவவார் - பெரியாராயுள்ளார் உவந்தனவற்றைத் தாம் உவவார். இல்லம் சிறியாரைக் கொண்டு புகார்-தம் இல்லத்தின் கண் கீழ்மக்களைக் கொண்டு புகார். அறிவு அறியா பிள்ளையே யாயினும் இழித்து உரையார்-அறிவினை யறியாத பிள்ளையேயாயினும் உயர்த்தன்றி இழித்துச் சொல்லார், தம்மோடு அளவளாவு இல்லா இடத்து - தம்மொடு அளவளா வில்லா விடத்து.

பெரியார் உவந்தவைகளை ஒருவா தாம் விரும்புதலும், கீழ்மக்களை வீட்டினுள் அழைத்துப்போதலும், தம்முடனே நெஞ்சு கலந்த நெருக்கம் இல்லாதவா சிறுபிள்ளையாயினும் அவரை உயர்வாகவன்றி இழிவாகப் பேசுதலும் ஆகா.

அளவளாவு - அளாவு என்பது அடுக்கி மருஉவாகிய தொடாமொழி ஒரு சொல்லாக வழங்குவது (அளாவு - கலத்தல், அளாவு அளாவு - அளவளாவு - நன்றாகக் கலத்தல் - ஐக்கமா யிருத்தல்).

"இடுகுடைத்தேர் மன்னா எமக்கமையு மென்று
கடிதவர் தாம் காதலிபப தாகாதல் கொண்டு
முடிய எனைத்தும் உணரா முயறல்
கடியன கனைத்து விடல்."—பழமொழிநானூறு.

69. முனியார், துனியார், முகத்தெதிர் நில்லார்.
தனிமை யிடத்துக்கண் தங்கருமம் சொல்லார்.
இனியவை யாமறிதும் என்னார். கசிவின்று
காக்கைவெள் ளென்னு மெனின்.

(இ - ள்.) முனியார்-அரசன் செய்வனவற்றை வெறார். துனியார் - அவனோடு கலாயார். முகத்தெதிர் நில்லார் - விலங்க வன்றி நேர்முகத்து எதிர் நில்லார். தனிமை இடத்துக்கண் தங்கருமம் சொல்லார் - அரசன் தனியே நின்ற இடத்தின்கண் தங்கரு

மம் சொல்லார். இனியவை யாம் அறிதும் என்னார் - இனியவான பொருள்களை யாங்கள் நுகர்ந்தறிவே மென்று அரசற்குச் சொல்லார். காக்கை வெள்ளென்னும் எனின் கசிவு இன்று-காக்கை வெள்ளென்றிருக்கு மென்று அரசன் சொல்லினனாயினும் அவன் மேல் அன்பின்றி வெறார்.

அரசன் செய்கின்ற காரியங்களை வெறுத்தலும் அவனோடு கலகங்கொள்ளலும் ஆகா. விலகியன்றி அரசனுக்கு நேர் முகமாக எதிரில் நிற்றல் கூடாது. அரசன் ஏகாந்தமாக இருக்கும்போது அவனிடத்தில் ஒருவா தம்முடைய காரியங்களைச் சொல்லிக்கொள்ளுதல் ஆகாது. இனிமையான பொருள்களை நாங்கள் அநுபவித்தறிந்திருக்கிறோ மென்று அரசனிடத்தில் சொல்லவொண்ணாது. காக்கை வெண்ணிறமுடையது என்றாற் போன்ற அபவாதங்களை அரசன் பேசினனும் அவன்மேலுள்ள அன்பு நீங்கி வெறுத்தல் ஆகாது.

70. உமிவும் உயர்ந்துழி யேறலும் பாக்கும்
வகையில் உரையும் வளர்ச்சியும் ஐந்தும்
புணரார் பெரியா ரகத்து.

(இ - ள்) உமிவும்-உமிதலும், உயர்ந்துழி ஏறலும் - உயர்ந்த இடத்து ஏறியிருத்தலும், பாக்கும் - பாக்குத்தின்னலும், வகையில் உரையும் - கூறுபாடு இல்லாத உரையும், வளர்ச்சியும் - உறங்குதலும், ஐந்தும் - என இவ்வைந்தையும், பெரியார் அகத்து புணரார் - அரசர் முன்பு செய்யார்.

எச்சில் உமிதல், உயர்வான பீடத்திருத்தல், அடைக்காயுண்ணல், வகைப்படாத வார்த்தை, உறங்குதல் என்னும் ஐந்தனையும் அரசர்முன்பு செய்யற்க.

பாக்கு தாம்பூலத்தைக் குறித்து நின்றது. வளர்ச்சி - கண்வளர்தல்.

71. இறைவர்முன் செல்வமும் கல்வியும் தேசும்
குணனும் குலமுடையார் கூறார், பகைவர்போல்
பாரித்துப் பல்கால் பயின்று.

(இ - ள்.) குலமுடையார்-குடிப்பிறந்தார், இறைவர் முன் - அரசர்முன்பு, செல்வமும் - தம் செல்வமும், கல்வியும் - கல்வியும், தேசும் - தமது விளக்கமும், குணனும் - குணனும், பகைவர் போல்-தமக்குத் துன்பஞ் செய்யும் பகைவர்போல், பாரித்து - பரப்பி, பல்கால் - பல்கால், பயின்று கூறார்-பயின்று உரையார்.

அரசரெதிரில் தமது செல்வம் கல்வி விளக்கம் குணம் என்பவைகளைப் பலமுறையும் விரித்துப்பேசுதல் ஒழிக: இது நற்குடிப் பிறப்பினர் ஒழுக்கம்.

தேசு - தேஜஸ் என்கிற வடமொழித்தற்பவம். பகைவரெதிரிலே பிரதாபம் பேசுவதுபோல் அரசரெதிரில் தமது பெருமையை மிக விரிததுச் சொல்லவேண்டா என்பது இச்செய்யுளின் கருத்து.

72. பெரியார் மனையகத்தும் தேவ குலத்தும்
வணங்கார் குரவரையும் கண்டால் அணங்கொடு
நேர்பெரியார் செல்லு மிடத்து.

(இ - ள்.) பெரியார் மனையகத்தும்-அரசர் மனையகத்தும், தேவகுலத்தும் - தேவராலயங்களுள்ளும், குரவரையும் கண்டால் வணங்கார்-குரவரையும் கண்டால் வணங்கார். அணங்கொடு பெரியார் நேர் செல்லுமிடத்து (கண்டால் வணங்கார்) - தெய்வங்கள் புறம்போந்தெழுந்தருளுமிடத்தும் அரசர் புறம்போது மிடத்தும் கண்டாலும் வணங்கார்.

அரமனையிலும் ஆலயத்திலும் தெய்வங்கள் விழாக் கொள்ளுமிடத்தும் அரசர் புறம்போந்து ஊர்வலம் வருதற் கண்ணும் கண்டால் குரவரையும் வணங்காதொழிக.

செல்லுமிடத்தும் என்ற உம்மை தொக்கது. நேர்பெரியார் என்றியைத்து நேர்மையுடைய பெரியார் என்று கொள்வதும் பொருந்தும்.

73. நகையொடு கொட்டாவி காறிப்புத் தும்மல்
இவையும் பெரியார்முன் செய்யாரே. செய்யின்
அசையாது நிற்கும் பழி.

(இ-ள்.) நகையொடு கொட்டாவி காறிப்பு தும்மல் இவையும் - சிரிப்பும் கொட்டாவியும் காறியுமிதலும் தும்மலும் என இவையும், பெரியார்முன் செய்யார் - அரசர்முன்பு செய்யார். செய்யின் நிற்கும்பழி அசையாது ஏ - செய்வராயின் நிற்கும்பழி குறையாதே.

அரசரெதிரில் சிரித்தல் கொட்டாவிவிடுதல் காறியுமிதல் தும்முதல் என்னும் இவைகளைச் செய்யற்க. செய்தால் பழி வளரும்.

கொட்டாவி - (கொட்டு + ஆவி) கொட்டி விடப்பட்ட ஆவி. காறிப்பு - காறு என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற் பெயர்.

## ஆசிரியரிடம் ஒழுகு முறைமை

74. நின்றக்கால் நிற்க, அடக்கத்தால் : என்றும்,
இருந்தக்கால் ஏவாமை ஏகார் : பெருந்தக்கார்,
சொல்லிற் செவிகொடுத்துக் கேட்டீக : மீட்டும்
வினவற்க சொல்லொழிந்தக் கால்.

(இ - ள்.) பெருந்தக்கார் என்றும் அடக்கத் தால் - நன்மாணுக்கர் என்றும் ஆசிரியர்முன் அடங்கி ஒழுகவேண்டுதலின், நின்றக்கால் நிற்க - அவர்பாடஞ் சொல்லுதலை நிறுத்தினால் தாமும் நிற்கக் கடவர். இருந்தக்கால் ஏவாமை ஏகார் - அவர்முன் இருந்த போது அவர் எழுந்துபோ என ஏவுதற்குமுன் எழுந்து போகார். சொல்லின் செவிகொடுத்து கேட். டீக - அவர்பாடம் முதலியவற்றைச் சொல்லின் செவி தாழ்த்துக் கேட்டிடுக. சொல்லொழிந்தக்கால் மீட் டும் வினவற்க - அவர் யாதொன்றும் சொல்லாவிடின் தாமும் வினவாதிருக்கக்கடவர்.

நன் மாணுக்கராவார், ஆசிரியர் பாடஞ் சொல்லுதலை நிறுத்தினால் தாமும் நிற்கக்கடவர். ஆசிரியர் எழுந்துபோ என்று ஏவுமுன்னா எழுந்துபோகார். ஆசிரியர் பாடம் முத லியவற்றைச் சொன்னால் செவிதாழ்த்துக் கேட்பர். அவர் யாதொன்றும் சொல்லாவிட்டால் தாமும் வினவாமல் இருக் கக் கடவர்.

கேட்டீக - வியங்கோட்டிரிசொல் விகாரமாய் நின்றது. "சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந்தீகென" எனப் பாலைக் கலியில் வருகின்றது.

## பெரியோர் சபையில் தவிர்வன.

75. உடுக்கை இகவார்; செவிசொறுண்டார்; கைமேல் எடுத்துரையார்; பெண்டிர்மேல் நோக்கார்; செவிச்சொ கொள்ளார், பெரியா ரகத்து. [ல்லும்

(இ - ள்.) பெரியாரகத்து - பெரியாரவைக்களத்தில், உடுக்கை இகவார்-ஆடையைக் களையார்; செவி சொறண்டார்-காதைச் சொறியார்; கைமேல் எடுத்து உரையார் - கை மேலெடுத்துப் பேசார். பெண்டிர்மேல் நோக்கார் - மாதர்களை நோக்கார்; செவிச் சொல்லும் கொள்ளார் - பிறர், தம்செவியில் சொல்லும் சொல்லையும் கேளார்.

பெரியோா கூடியிருக்கின்ற சபையிலே, ஆடைகளைதலும், காதைச் சொறிதலும், கையை மேலெடுத்துப் பேசுதலும், பெண்டிரை உற்றுபபார்த்தலும், பிறர் தமது செவியில் சொல்லும் சொல்லைக் கேட்டலும் ஆகா.

"செவிச் சொல்லும் கேளார்" என்றும் பாடம். சொறுண்டு - இது இக்காலத்துச் சுரண்டு என வழங்கிவருகிறது. பிரதிகளில் சுறண்டாா என்றும் பாடபேதம் உண்டு.

## ஒருவரிடம் ஒன்றுரைக்கும் செவ்வி.

76. விரைந்துரையார்; மேன்மே லுரையார்; பொய்யாய
பரந்துரையாா; பாரித் துரையாா;—ஒருங்கெனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி யறிந்து.

(இ - ள்.) விரைந்து உரையார் - கடுகி உரையார்; மேன்மேல் உரையார் - மேன்மேல் உரையார்; பொய்யாய பரந்து உரையார் - பொய்யாய சொற்களைப் பரக்க உரையார்; பாரித்து உரையார் - தாம் உரைக்கத்தக்க சொற்களைப் பரப்பியுரையார். சில்

எழுத்தினாலே ஒருங்கெனைத்தும் பொருள் அடங்க - சில்லெழுத்தினானே முழுவதும் பொருள் விளங்கும் வகை, காலத்தால் செவ்வியறிந்து சொல்லுக - காலத்தோடு பொருந்தச் செவ்வியறிந்து சொல்லுக.

ஒருவரிடத்தில் ஒன்றைச் சொல்லும்போது அவசரப்படுதலும், சொன்னதை மேன்மேலும் சொல்லுதலும், பொய்யைப் பரக்கச் சொல்லுதலும், சொல்வதை வெகுவாய் விரித்துச் சொல்லுதலும் கூடா. சொல்லவேண்டிய பொருளைச் சில எழுத்துக்களில் அடக்கிக் காலத்திற் கேற்றபடி சொல்ல வேண்டும்.

"சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச், செவ்வனாடியிற் செறித்தினிது விளக்கி" என நன்னூலில் வருகின்றது.

## குலமாதர் தவிர்வன.

77. தம்மேனி நோக்கார் ; தலையுளரார் ; கைந்நொடியார ;
எம்மேனி யாயினும் நோக்கார் தலைமகன்
தன்மேனி யல்லாற் பிற.

(இ - ள்.) தலைமகன் தன்மேனி அல்லால் பிற எம்மேனி யாயினும் நோக்கார் - நற்குலப்பெண்டிர் தம் கணவரது உடலின் வடிவத்தையன்றி ஏனை ஆடவரது மேனி எத்துணை அழகுடையவேனும் பாரார். தம்மேனி நோக்கார் - தம் உடலின் வடிவத்தையும் நோக்கார். தலை உளரார் - தலைமயிரைக் கோதார். கைந்நொடியார் - கைந்நொடித்தல் முதலியன செய்யார்.

குலமாதர் தம்முடைய கணவரது தேகத்தின் வடிவத்தையன்றிப் பிறருடைய தேகத்தின் வடிவழகை வியந்து பாரார். தம்முடைய வடிவழகையும் (கண்ணாடி முதலியவற்றில்)வியந்து பாரார். தலைமயிரைக் கோதுதலும் கைந்நொடித்தலும் செய்யார்.

உளர்தல் - தடவுதல் (கோதுதல்)

## அரசவையில் தவிர்வன.

78. பிறரொடு மந்திரம் கொள்ளார் ; இறைவனைச்
சாரார் ; செவியோரார் ; சாரின் பிறிதொன்று
தேர்வார்போல் நிற்க திரிந்து.

(இ - ள்.) பிறரொடு மந்திரம் கொள்ளார் - பிறரொடுகூட இருந்து ஒன்றனை ஆராயார். இறைவனை சாரார் - அரசனைச் சார நில்லார். செவி ஓரார் - அரசன் பிறனொருவனுக்குச் சொல்லும் சொல்லைத் தம் செவியால் ஓரார். சாரில் பிறிதொன்று தேர்வார் போல் திரிந்துநிற்க - சார்ந்து நின்றவிடத்துப் பிறிதொரு காரியத்தை ஆராய்வார்போல முகந்திரிந்து

அரசனெதிரில் வேறொருவரோடு கூட இருந்துகொண்டு ஒரு காரியத்தை ஆராய்தலும், அரசனுக்குச் சமீபத்தில் நிற்றலும், அரசன் வேறொருவனிடத்துச் சொல்வதொரு காரியத்தைச் செவிகொடுத்துக் கேட்டலும் ஆகா. சமீபத்திலிருந்தால் வேறொரு காரியத்தில் கவனமாயிருப்பதுபோல் இருக்க வேண்டும்.

## செய்வன தவிர்வன.

79. துன்பத்துள் துன்புற்று வாழ்தலும், இன்பத்துள்
இன்ப வகையான் ஒழுகலும்,—அன்பின்
செறப்பட்டார் இல்லம் புகாமை, இம் மூன்றும்
திறப்பட்டார் கண்ணே உள.

(இ - ள்.) துன்பத்துள் துன்புற்று வாழ்தலும் - துன்பகாலத்தில் அத்துன்பத்துள் அமைவுற்று வாழ்தலும், இன்பத்துள் இன்பவகையான் ஒழுகலும் - இன்பகாலத்தில் பிறர்க்கு இன்புசெய்யும் வகையான் இன்புற்று நடத்தலும், அன்பின் செறப்பட்டார் இல்லம் புகாமை (உம்) - அன்பினின்றும் வேறுபட்டாரில்லம் புகாமையும், இ மூன்றும் - ஆகிய இம்மூன்றும, திறப்பட்டார் கண்ணே உள - ஒருதிறப்பட்டார் கண்ணே உளவாம்.

தமக்குத் துன்பம் நேரிட்ட காலத்தில் அதனைப் பொறுத்திருத்தலும், இன்பம் உண்டானால் மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் சந்தோஷங்கொண்டு நடத்தலும், அன்பு நீங்கினவருடைய வீட்டை யடையாமையும் ஆகிய இமமூன்றும் ஒரு வழிப்பட்டவரிடத்தே காணப்படும் குணங்களாம்.

80. தெறுவந்தும் தங்குரவர் பேருரையார். இலலத்
துறுமி நெடிதும் இராஅர். பெரியாரை
என்றும் முறைகொண்டு கூறார். புலையரையும்
நன்கறிவார் கூறார் முறை.

(இ - ள்.) நன்கறிவார் - நன்கறிவார், தெறுவந்தும் தம் குரவர் பேர் உரையார் - தாம் வெகுண்டா

ராயினும் தம் குரவர் பெயரைச் சொல்லார். இல்லத்து உறுமி நெடிதும் இரார் - தம்மில்லத்தின்கண் தம்மனையை மிகவும் கழறியுரைத்து நெடிதிரார். என்றும் பெரியாரை முறைகொண்டு கூறுர் - என்றும் தம்மிற் பெரியாரை முறைப்பெயர்கொண்டு சொல்லார். புலையரையும் முறைகூறுர் - புலையரையும் முறைப்பெயர்கொண்டு கூறுர்.

கோபங்கொண்டு நின்றவிடத்தும் தம்முடைய குரவரது பெயரைச் சொல்லல் ஆகாது. நெடுநேரமளவாக மனையாளை மிகக் கோபித்திருத்தல் கூடாது. தம்மிற் பெரியோரையும் புலையரையும் முறைப்பெயர்கொண்டு அழைத்தலாகாது.

தெறுவந்து - (தெறு - அழி) அழிய வந்து; அழிதற்குக் காரணமாகி கோபம் உண்டாகி. உறுமி - ஒலிக்குறிப்புப்பற்றி வந்தசொல்: இச் செய்கையின் இழிவுபற்றியே ஆசிரியர் இச் சொல்லை வழங்கினர்போலும். பனுமி உறுமும் என்ற வழக்கும் இதனை உணர்த்தும்.

81. புழைக்கடைப்பு காரரசன் கோட்டி யுரிமை
இவற்றுக்கண் செவ்வியார் நோக்காரே அவ்வத்
தொழிற்குரிய ரல்லா தவர்.

(இ - ள்.) புழைக்கடை புகார் - பிறர் மனையின்கண் புழைக்கடை வாயிலால் புகார். அரசன் கோட்டி உரிமை இவற்றுக்கண் - அரசன் கோட்டிகொண்டு கூத்துமுதலாயினவற்றுல் இன்புறுகின்ற விடத்தும் உரிமைமகளிரோடு இருந்தவிடத்தும், செவ்வியார் நோக்கார் - செவ்வியராயுள்ளார் சென்று நோக்கார்,

அவ்வத்தொழிற்கு உரியரல்லாதவர் - அந்த அந்தத் தொழிற்கு உரியரல்லாதார்.

வேறொருவருடைய வீட்டினிடத்தில் புழைக்கடை வாயிலாக உள்ளே போதலாகாது. அரசன் கூத்து முதலியவற்றால் இன்புறுகின்ற விடத்திலும், உரிமைமகளிரோ டிருக்கு மிடத்திலும், அவ்வத்தொழிலுக்கு உரியவர்களன்றி மற்றவர்கள் போய்ப் பார்த்தல் கூடாது.

புழைக்கடை - (புழை - துவாரம்) - துவாரத்தின் கடை. வீடுகளை இடையீடாக ஏற இடம் விட்டுக் கட்டுவது தமிழ்நாட்டில் வழக்கம். இவ்விடையீடான இடம் வீட்டுக்குப் புழை (துவாரம்) போல இருத்தலால் அதன் கடையைப் புழைக்கடை என்பது மரபாயிற்று. இது ஆகுபெயராய் வீட்டின் பின்பிறத்துள்ள நிலத்தைக் குறிப்பதாயிற்று. "எங்கள் தோட்டத்துப் புழைக்கடை வாவியுள்" எனத் திருப்பாவையில் வருகின்றது. கோட்டி - கோஷ்டி என்னும் வடசொல்.

82. வண்ண மகளி ரிடத்தொடு தம்மிடம்
ஒள்ளிய மென்பார் இடங்கொள்ளார். தெள்ளி
மிகக்கிழமை உண்டெனினும் வேண்டாவே; பெண்டிர்க்
குவப்பன வேறாய் விடும்.

(இ - ள்.) ஒள்ளியம் என்பார் - அறிவுடையோரென்று சொல்லப்படுவோர், வண்ணமகளி ரிடத்தொடு தம்மிடம் இடங்கொள்ளார் - கோலஞ்செய்யும் மகளிரிடத்தோடு சேர்ந்த தம்மிடத்தைச் சிறந்த இடமாகக் கொள்ளார். தெள்ளி - தெளிவுற்று, மிக கிழமை உண்டெனினும் - மிகுந்த உரிமை உளதாயினும், வேண்டாவே - விரும்பப்படுவன அல்ல. பெண்

டிர்க்கு உவப்பன வேறு ஆய்விடும் - தம் மனைவி யர்க்கு விரும்பப்படுவன வேறுபடு மாதலால்.

பொதுமகளிர் வசிக்கின்ற இடத்திற்குச் சமீபமாக உள்ள தம்முடைய இடத்தை வசிப்பதற் குரிய சிறந்த இடமாகக் கொள்ளலாகாது. அங்ஙனங் கொண்டால் தம்முடைய மனைவி யரது மனவிருப்ப மெல்லாம் வேறுபடும்.

83. நிரல்படச் செல்லார்; நிழல்மிதித்து நில்லார்;
உரையிடை ஆய்ந்துரையார்; ஊர்முனிவ செய்யார்;
அரசர் படையளவும் சொல்லாரே; என்றும்
கடைபோக வாழ்துமென் பார்.

(இ - ள்.) என்றும் கடைபோக வாழ்தும் என் பார் - எப்போதும் ஒருதன்மையாக வாழ்து மென் பார், நிரல்படச் செல்லார் - ஒருவர்பக்கத்தில் வரி சைப்படப் போகார்; நிழல் மிதித்து நில்லார்-ஒருவ ருடைய நிழலை மிதித்து நில்லார். உரையிடை ஆய்ந் துரையார்-முன்னர் ஆராய்ந்தன்றிப் பேசும்போது ஆராய்ச்சி செய்து பேசார்; ஊர் முனிவ செய்யார் - ஊரிலுள்ளோர் வெறுக்கத்தக்கவைகளைச் செய்யார்; அரசர் படையளவும் சொல்லார் - அரசரது பூடை யளவைப் பகைவர்க்குச் சொல்லார்.

ஒருவர் பக்கத்திலே போகும்போது ஒரு வரிசைப்படப் போதலாகாது. ஒருவருடைய நிழலை மிதித்துக்கொண்டு நிற்கவொண்ணாது. முன்னதாகவே ஆராய்ந்துகொண்டு பேசுவ தல்லது பேசும்போது ஆராய்ச்சிசெய்து பேசுதல் கூடாது. ஊரினர்க்கு வெறுப்பான காரியங்களைச் செய்தல் அடுக்காது. அரசருடைய படையின் அளவைப் பகைவருக்குச் சொல்லப் போகாது.

84. அளையுறை பாம்பும் அரசும் நெருப்பும்
முழையுறை சீயமும் என்றிவை நான்கும்
இளைய எளிய பயின்றனஎன் றெண்ணி
இகழின் இழுக்கந் தரும்.

(இ - ள்.) அளை உறை பாம்பும் - புற்றில் வாழ் அரவும், அரசும் - அரசனும், நெருப்பும் - தீயும், முழை உறை சீயமும் - குகையில் வாழ் சிங்கமும், என்ற இவை நான்கும் - என்கின்ற இந்நான்கனையும், இளைய என்று - இளையன என்றும், எளிய என்று - எளியன என்றும், பயின்றன என்று - பழகினவை என்றும், எண்ணி இகழின் - எண்ணி இகழின், இழுக்கம் தரும் - துன்பம் தருவனவாம்.

பாம்பு அரசன் நெருப்பு சிங்கம் என்கிற இந்நான்கையும் இளையனவென்றும் எளியனவென்றும் பழகினவென்றும் இகழ்ந்தால் துன்பம் உண்டாகும்.

"சீர்த்தகு மன்னா சிறந்தனைத்துங் கெட்டாலும்
நேர்த்துரைத தெள்ளார் நிலைநோக்கிச் - சீர்த்த
இளையின் றிப் போஒய்த் தனித்தாயக் கண்ணும்
இளைதென்று பாம்பிகழ்வா ரில்."—பழமொழிநானூறு

85. அறத்தொடு கல்யாணம் ஆள்வினை கூரை
இறப்பப் பெருகியக் கண்ணும் - திறப்பட்டார்
மன்னரின் மேம்படச் செய்யற்க. செய்பவேல்
மன்னிய செல்வம் கெடும்.

(இ - ள்.) திறப்பட்டார் இறப்ப பெருகியக் கண்ணும் - அறிவுடையோர் தம்மாட்டுச் செல்வம் மிகப் பெருகிய விடத்தும், அறத்தொடு கல்யாணம்

ஆள்வினை கூரை-அறத்தினையும் கல்யாணத்தினையும் முயற்சியையும் வீட்டினையும், மன்னரின் மேம்பட செய்யற்க - அரசர் செய்வதினும் மேம்படச் செய்யா தொழிக. செய்பவேல் - செய்வாராயின், மன்னிய செல்வம் கெடும் - தம்மாட்டுற்ற செல்வம் கெடும்.

எவ்வளவு மிக்க செல்வம் உடையவராயினும், தருமம் - கல்யாணம் - ஒரு தொழின் முயற்சி-வீடு என்னும் இவைகளை அரசரைக் காட்டிலும் மேன்மையாக ஒருவா செய்தலாகாது: செய்தால் தம்மிடத்துள்ள செல்வம் அழிவடையும்.

ஆள்வினை-காரணமான முயற்சியைக் காரியமான ஆளும் வினை என்பது உபசாரவழக்கு. கூரை - சினையாகுபெயர்.

86. உண்டது கேளார் குரவரை மிக்காரைக்
கண்டுழிக் கண்டால் மனந்திரியார். புல்லரையும்
உண்டது கேளார் விடல்.

(இ - ள்.) குரவரை மிக்காரை கண்டுழி - ஐங் குரவரையும் சான்றோரையும் கண்டால, மனம் திரி யார் - மனம் வேறுபடாதவர்கள், (அவரை நோக்கி), உண்டது கேளார்-நீவிர் உண்டது யாதெனவினவார். (ஆதலால்), புல்லரையும் உண்டது கேளார் விடல் - கீழோரையும் உண்டது யாதென்று வினவாதொழிக.

ஐங்குரவரையும் பெரியோரையும் கண்டால், 'நீங்கள் உண்டது என்ன' என்று கேட்டலாகாது. ஆதலால், கீழோ ரையும் அங்ஙனம் கேட்கவேண்டா.

"கண்டுழிக்கண் டாமனந் திரியார்" என்றும் "கண்டுழிக் கண்டான் முகந்திரியார்" என்றும் பாடபேத முண்டு.

87. இடந்தாரைக் கால்கழுவாா, பூப்பெய்யார், சாந்தம்
மறந்தானும் எஞ்ஞான்றும் பூசார், இடந்தார்கண்
இல்லார்தாம் கட்டின் மிசை.

(இ - ள்.) எஞ்ஞான்றும் - எப்போதும், கட்டில் மிசை கிடந்தாரை கால்கழுவார் - கட்டின்மீது படுத்திருப்பவரது காலைக் கழுவார்; பூ பெய்யார் - அவருக்குப் பூப்புனேயார்; மறந்தாலும் சாந்தம் பூசார் - அவருக்கு மறந்தாவது சந்தனம் பூசார். கிடந்தார் கண் நில்லார் - கிடந்தாரருகில் நிற்றலுஞ் செய்யார்.

ஒருவர் கட்டிலின்மேல் படுத்திருந்தால், அப்போது அவருடைய் காலைக் கழுவுதலும் - அவருக்குப் பூச்சூடுதலும் - சந்தனம் பூசுதலும் - அவரருகில் நிற்றலும் ஆகா.

கிடந்தாரைக் கால்கழுவார் என்னும் முடிபை, "முதலை ஐயுறின் சினையைக் கண்ணுறும், அதுமுதற் காயின் சினைக்கையாகும்" (நன் - 315) எனகிறபடி முடித்துக்கொள்ளவேண்டும். கிடந்தாரைப் பூப்பெய்யார் எனபது கிடநதாருக்கு என நான்காவதில் மயங்கிவந்ததாகக் கொள்ளவேண்டும். "நில்லாராம் கட்டின் மிசை" எனறும் பாடம்

88. உதவிப் பயனுரையார்; உண்டி பழியார்;
அறத்தொடு தாம்நோற்ற நோன்பு வியவார்;
திறத்துளி வாழ்துமென் பார்.

(இ - ள்.) உதவி பயன் உரையார் - தாம் ஒருவருக்குச் செய்த நன்றியின் பயனைச் சொல்லார்; உண்டி பழியார் - தமக்கு ஒருவர் இட்ட உணவை இகழ்ந்துரையார்; தாம் அறத்தொடு நோற்றநோன்பு வியவார் - தாம் செய்த அறத்தையும் விரதத்தையும் புகழ்ந்துரையார்; திறத்து உள்ளி வாழ்தும் என்பார்- பெரியோருடைய ஒழுக்கத்தினை நினைத்து அவ்வாறு வாழ்துமென்று எண்ணுவோர்.

தாம் ஒருவர்க்குச் செய்த நன்றியைத் தாமே பாராட்டுத லாகாது. தமக்கு ஒருவர் இட்ட உணவை இகழ்ச்சிசெய்தல் கூடாது. தாம் செய்த தருமத்தையும் அநுஷ்டித்த விரதத் தையும் தாமே புகழ்ந்துகொள்ளுத லாகாது.

"தான்புரி தவத்தைக் கொடையினைப் புகழிற் றழைவுறு தகைகும்"—காசிகண்டம்.

89. எய்தாத வேண்டார்; இரங்கார் இழந்ததற்குக்;
கைவாரா வந்த இடுக்கண் மனமழுங்கார்;
மெய்யாய காட்சி யவர்.

(இ - ள்.) எய்தாத வேண்டார் - தமக்குக் கிடைத்தற் கரியவற்றை விரும்பார். இழந்ததற்கு இரங்கார் - தம்மால் இழக்கப்பட்டனவற்றிற்கு வருந் தார். கைவாரா வந்த இடுக்கண் மனம் அழுங்கார் - அகற்றற்கரிய இடுக்கண் உற்றுழி அதற்கு மனம் கலங்கார்; மெய்யாய காட்சியவர் - உண்மையான அறிவினையுடையார்.

கிடைப்பது அருமையான பொருள்களை விரும்புவதும், இழந்த பொருளைக் குறித்து வருந்துவதும், நீக்கமுடியாத துன பம் நேரிட்டால் அதற்கு மனங் கலங்குவதும் பயனில்லாத காரியங்களாம்.

"கழிந்தவை தானிரங்கான"— சிறு பஞ்சமூலம். கை வாரா - நூறுகெட்ட எதிரமறை வினையெச்சம் - (கைவருதல்- கைக்ககப்படுதல், அநுகூலமாதல்)-அநுகூலப்படாத. கைவா ராவந்த இடுக்கண் - அநுகூலப்படாத இடுக்கண் - பிரதிகூல மான இடுக்கண்.

90. தலைக்கிட்ட பூமேவார்; மோந்தபூச் சூடார்.
பசுக்கொடுப்பின் பார்ப்பார்கைக் கொள்ளாரே என்றும்.
புலைக்கெச்சில் நீட்டார். விடல்.

(இ - ள்.) என்றும் - எப்போதும், தலைக்கு இட்ட பூ மோவார்-ஒருவர் தலையில் முடித்த பூவைத் தாம் முடியார். மோந்த பூ சூடார் - ஒருவர் மோந்த பூவையும் சூடார். பார்ப்பார் பசு கொடுப்பின் கைக் கொள்ளார் - பிராமணர் பசுவினைக் கொடுத்தால் அதனை வாங்கார். புலைக்கு எச்சில் நீட்டார் - புலையருக்கு எச்சிலைக் கொடார். விடல் - ஆதலால் இவைகளை விடுக.

ஒருவர் தலையில் முடித்த பூவைத் தம்முடைய தலையில் முடித்தலும், ஒருவர் மோந்த பூவைச் சூடுதலும், பிராமணரிடம் கோதானம் வாங்குதலும் கூடா. புலையருக்கு எச்சிற் பண்டங்களைக் கொடுத்த லாகாது.

"தலைக்கிட்ட பூமோவார்" என்றும் பாடம்.

91. மோட்டுடைப்போர்வையோடேக்கழுத்தம்தாளிசைப்புக்
காட்டுளே யானும் பழித்தார மாம், தம்மின்
மூத்த உளவாக லான்.

(இ - ள்.) காட்டுளே யானும் - காட்டினிடத்திலேனும், தம்மின் மூத்த உளவாகலான் - தம் மூத்தோர் உளரா யிருப்பாராயின், (அவர் முன்), மோட்டுடைப் போர்வையோடு - உடலின்மீது போர்த்தலும், ஏக்கழுத்தம் - இறுமாந்திருத்தலும், தாள் இசைப்பு - இருதாளையும் சேர்த்திணைத்திருத்தலும், பழித்தாரமாம் - பழியின் எல்லையாம்.

காட்டிலேயாயினும் தமக்கு மூத்தோர் எதிரில் உடலின் மீது போர்த்துக்கொள்ளுதலும் கர்வித்திருத்தலும் அட்டணைக்காலிட்டிருத்தலும் ஆகா.

ஏக்கழுத்தம் - (ஏ - உயர்வு, 'ஏகல் மலைநாட' என்பதிற் போல)-கழுத்தை உயர்த்திபிருத்தல் : இறுமாப்பு.

"பழித்தார் மாந்தம்மின்" எனவும் பாடபேதம் உண்டு.

92. தலைஇய நற்கருமம் செய்யுங்கால் என்றும்
புலையர்வாய்நாட்கேட்டுச்செய்யார்:தொலைவில்லா
அந்தணர்வாய் நாட்கேட்டுச் செய்க.அவர்வாய்ச்
என்றும் பிழைப்ப தில. [சொல்

(இ - ள்.) தலைய நல்கருமம் செய்யுங்கால் - (அறிவுடையோர்) மேலான நற்கருமங்களைச் செய்யுமிடத்து, என்றும் - எப்போதும், புலையர்வாய் நாள் கேட்டு செய்யார் - புலையரிடத்து நாள்கேட்டுச் செய்யார் : தொலைவு இல்லா அந்தணர்வாய் நாள் கேட்டு செய்க - கேடில்லாத அந்தணரிடத்து நாள் கேட்டே நற்கருமம் செய்க : அவர் வாய்ச்சொல் என்றும் பிழைப்பது இல-அவர் வாய்ச்சொல் என்றும் பிழைபடுவன அல்லவா மாதலால்.

அந்தணருடைய வாய்ச்சொல் தவறாதாதலால், ஒரு நல்ல காரியத்தைச் செயயும்போது அந்தணரையே நல்ல நாள் கேட்டுச் செய்க. புலையரைக் கேட்டுச் செய்யற்க.

"நிலைஇய நற்கருமம்" என்றும் "நிலையினைந்த" என்றும் பாடம்.

93. மன்றத்து நின்றுஞற்றார். மாசு திமிர்ந்தியங்கார்.
என்றும் கடுஞ்சொல் உரையார். இருவராய்
நின்றுழியும் செல்லார். விடல்.

(இ - ள்.) மன்றத்து நின்று உஞற்றார் - (அறிஞர்) சான்றோரவைக்களத்து யாதோர் அங்கசேட்டையும் செய்யார். மாசு திமிர்ந்து இயங்கார் - மாசுள்

ளனவற்றைத் திமிர்ந்துகொண்டு நடவார். என்றும் கடுஞ்சொல் உரையார் - எக்காலத்தும் கடுஞ்சொற்கள் உரையார். இருவராய் நின்ற உழியும் செல்லார் - இருவராயிருந்து பேசுமிடத்துப் போகார். விடல் - ஆதலால் இவற்றை ஒழிக.

பெரியோர்கள் இருக்கின்ற சபையிலே யாதோர் அங்க சேஷ்டையும் செய்தலாகாது. நடக்கும்போது அழுக்குள்ளவைகளைத் தேய்த்துக்கொண்டு நடத்தலாகாது. எப்பொழுதும் கடுமையான சொற்களைச் சொல்லுதல் கூடாது. இருவராக இருந்து பேசுமிடத்தில் போதலாகாது.

"சொல்லார் விடல்" என்றும் பாடம்.

94. கைசுட்டிக்கட்டுரையார்: கான்மேல்எழுத்திடார்:
மெய்சுட்டி இல்லாரை உள்ளாரோ டொப்புரையார் :
கையிற் குரவர் கொடுப்ப இருந்தேலார்,
ஐயமில் காட்சி யவர்.

(இ - ள்.) ஐயம் இல் காட்சியவர் - ஐயமற்ற அறிவுடையோர், கைசுட்டி கட்டுரையார் - தம் குரவர்முன் கையைச்சுட்டிக்காட்டிப் பேசார். கால்மேல் எழுத்து இடார் - காலின்மேல் எழுதார். உள்ளாரோடு இல்லாரை மெய்சுட்டி ஒப்பு உரையார் - கல்விமுதலியவற்றை உடையாரோடு அவற்றை இல்லாரை மெய்யெனச் சாதித்து ஒப்பிட்டுக்கூறார். கையில் குரவர் கொடுப்ப இருந்து ஏலார் - கையில் குரவர் கொடுப்பதை உட்கார்ந்திருந்து ஏற்கார்.

குரவரெதிரில் கையைச் சுட்டிக்காட்டிப் பேசுதல் ஆகாது. காலின்மேல் எழுதிக்காட்டுதல் ஆகாது. கல்விமுதலி

யன இல்லாதவர்களை அவற்றை உடையவர்களுக்குச் சமான மாகச் சாதித்தல் ஆகாது. குரவர் கொடுப்பதை உட்கார்ந்து கொண்டே வாங்கிக்கொளவது கூடாது.

"காலாலெழுத்திடார்" என்றும் பாடம்.

95. தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்கென்
றுன்னித் துவைத்த பொருளோ டிவைநான்கும்
பொன்னினைப்போல்போற்றிக்காத்துய்க்க: உய்க்காக்கால்
மன்னிய ஏதம் தரும்.

(இ - ள்.) தன் உடம்பு - தன்னுடலும், தாரம் - மனைவியும், அடைக்கலம் - தன்னிடத்தில் அடைக் கலமாக ஒருவன் வைத்த பொருளும், தன் உயிர்க் கென்று உன்னி துவைத்த பொருளோடு - தன் னுயிர்க்கு உதவியாக எண்ணிச் சேர்த்துவைத்த பொருளும், இவை நான்கும்-ஆகிய இந்நான்கனையும், பொன்னினைப்போல் போற்றி காத்துய்க்க - பொன் னைப்போலக் காத்தொழுக. உய்க்காக்கால் - அவ் வாறு ஒழுகாவிடத்து, மன்னிய ஏதம் தரும்-மிகுந்த துன்பத்தைத் தரும்.

தன்னுடம்பு - தன்பெண்டாட்டி - தன்னிடத்தில் ஒருவர் அடைக்கலமாக வைதத பொருள - தனக்கு ஆபத்துக்காலத் தில் உதவியாகும்படி சேர்ததுவைத்த பொருள் ஆகிய இந்த நான்கையும் அருமையாகப் பாதுகாவாவிட்டால் மிக்க துன் பம் உண்டாகும்.

"எண்ணி நினைத்த பொருளோடு" என்றும், "எண் ணித்துவைத்த பொருளோடு" என்றும் பாடபேதம் உண்டு.

96. நந்தெறும்பு தூக்கணம் புள்காக்கை என்றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க் காசாரம்
எப்பெற்றி யானும் படும்.

(இ - ள்.) நந்து எறும்பு - ஆக்கமுள்ள எறும்பும், தூக்கணம்புள் - தூக்கணம் பறவையும், காக்கை - காகமையும், என்ற இவைபோல் - என்றுசொல்லப்பட்ட இவைகளின் செய்கைபோல, நல்ல தம் கருமம் - நல்லனவாகிய தங்கருமத்தை, கடைப்பிடித்து-சோராமல்கொண்டு, தம் கருமம் ஆ பெற்றியாக முயல்பவர்க்கு - தமது காரியங்களை அம்மூன்றின் தன்மைபோல் செய்பவர்க்கு, ஆசாரம் எ பெற்றியானும் படும் - இல்வாழ்க்கையின் ஒழுக்கம் எத்தன்மையானும் சிறப்புறும்.

எறும்பு கிடையாத காலத்திற் குதவக் கிடைத்த காலத்தில் உணவைச் சேர்க்கும். தூக்கணங்குருவி குளிர்காற்று முதலியவற்றால் இடையூறுறா வகையாகக் கூடு கட்டிக்கொள்ளும். காக்கை தன் இனத்தை அழைத்துண்ணும். இங்ஙனமாக இவைகளின் செய்கையை அநுசரிப்பவாக்கு இல்வாழ்க்கையின் ஒழுக்கம் எவ்விதத்திலும் சித்தியாகும்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும், அன்ன நீரார்க்கே உள"—திருக்குறள்.

"Go to the ant, thou sluggard; consider her ways, and be wise, which, having no guide, overseer, or ruler, provideth her meat in the summer, and gathereth her food in the harvest"—Proverbs of Solomon.

97. தொழுதானும் வாய்புதைத் தானுமஃ தன்றிப்
பெரியார்முன் யாதும் உரையார்: பழியவர்
கண்ணுளே நோக்கி யுரை.

(இ - ள்.) பெரியார்முன் - அறிஞர் பெரியார் முன் யாதேனும் ஒன்று உரைக்கவேண்டின், தொழு

தாலும் வாய்புதைத்தாலும் அஃதன்றி - வணங்கி நின்றேனும் வாய் புதைத்து நின்றேனும் உரைப்புரேயன்றி, யாதும் உரையார் - வேறுவகையின் உரையார். (ஆதலால்), அவர்கண் - நீ அவர்முன், பழி உள்ளே நோக்கி - குற்றம்யாதும் உளவாகாமல் ஆராய்ந்து, உரை - உரைப்பாயாக.

பெரியோரிடத்தில் ஏதாயினும் சொல்வதானல், வணங்கி நின்றுவது வாய்பொத்தி நின்றுவது சொல்வதன்றி வேறுவிதமாகச் சொல்லலாகாது. அவர்முன் குற்றம் யாதும் உண்டாகாமல் ஆராய்ந்து சொல்க.

"வழியவா" என்றும் பாடம்.

98. சூதர் கழகம் அரவ மறுக்களம்
பேதைக ளல்லார் புகாஅர். புகுபவேல்
ஏதம் பலவும் தரும்.

(இ - ள்.) சூதர் கழகம் - சூதாடு மிடத்தும், அரவம் அறு களம் - ஆரவாரம் நீங்காத விடத்தும், பேதைகள் அல்லார் - அறியாமையை யுடையரல்லார், புகார் - புகார். புகுபவேல் - புகுவராயின், பல ஏதமும் தரும் - பல துன்பங்களும் உளவாம்.

சூதாடுகின்ற இடத்திலும் ஆரவாரம் நீங்காத இடத்திலும் அறிவுடையார் போகார். போனல் துன்பங்கள் உளவாம்.

"அரவ மமர்களம்" என்றும் பாடம்.

99. உரற்களத்தும் அட்டிலும் பெண்டிர்கள் மேலும்
கடுக்கற்ற காட்சியார் நோக்கார் எடுத்திசையார்
இல்லம் புகாஅர் விடல்.

(இ - ள்.) நடுக்கு அற்ற காட்சியார் - சோர்வற்ற அறிவை யுடையவர், உரல்களத்தும் - ஆரவாரஞ் செய்யுமிடத்தும், அட்டிலும் - மடைப்பள்ளியிலும், பெண்டிர்கள் மேலும் - பெண்டிர்கள் உறையிடத்தும், நோக்கார் - நோக்கார்: எடுத்து இசையார் - எடுத்துரையார்: இல்லம் புகார்-இல்லத்துட் புகார்: விடல் - ஆதலால் நீ விடுக.

ஆர்வாரம் செய்யு மிடத்தைப் பார்த்தலும், மடைப்பள்ளியில் எடுத்துரைத்தலும், பெண்டிர்கள் உறைகின்ற இலலத்துட் புகுதலும் ஆகா.

எடுத்திசைத்தல் - குரலெடுத்துப் பேசுதல். இச்செய்யுள் நிரணிறை

நூலுக்குப் புறனடை.

100. அறியாத தேயத்தான், ஆதுலன், மூத்தான்,
இளையான், உயிரிழந்தான், அஞ்சினன், உண்பான்,
அரசர் தொழில்தலை வைத்தான், மணாளனென்
றொன்பதின்மர் கண்டீர் உரைக்குங்கால் மெய்யான
ஆசாரம் வீடுபெற் றார்.

(இ - ள்.) அறியாத தேசத்தான், வறியோன், மூத்தோன், சிறுவன், உயிரிழந்தவன், பயமுற்றவன், உண்பவன், அரசர் தொழிலில் தலைவைத்தவன், மணமகன், என்னும் இவ்வொன்பதின்மரும் உண்மையாய் உரைக்குமிடத்து ஆசாரமிலிகளாவர்.

"உரைக்குங்கால் ஆற்றவும்" என்றும், "உலகத்தி ராற்றவும்" என்றும் பாடம்.

# ஆசாரக் கோவை

## பாட்டு முதற்குறிப் பகராதி.


| பாட்டு. | இலக்கம். | பாட்டு. | இலக்கம். |
|---|---|---|---|
| அட்டமியு | 47 | ஐம்பூதம் | 15 |
| அந்திப்பொழுது | 29 | ஒழிந்ததிசை | 22 |
| அரசனுவாத்தியான | 16 | கடைவிலக்கிற் | 66 |
| அளையுறை | 84 | கண்ணெச்சில் | 41 |
| அறத்தொடு | 85 | கல்வியாணந | 48 |
| அறியாத | 100 | கறுத்த பகைமுனை | 46 |
| இருகையால் | 28 | காட்டுக் சுனைநது | 55 |
| இருதேவா | 31 | காலினீர் | 19 |
| இழியாமை | 27 | கால்வாய்த் | 62 |
| இறைவாமுன் | 71 | கிடக்குங்கால் | 30 |
| ஈன்றாள் | 65 | கிடந்தாரைக் | 87 |
| உச்சியம் | 43 | கிடந்துண்ணார் | 23 |
| உடம்புநன் | 59 | குரவரை | 17 |
| உடுக்கை | 75 | கைசுட்டிக் | 94 |
| உடுத்தலால் | 11 | கைப்பன | 25 |
| உடைநடை | 49 | சுடரிடைப் | 36 |
| உண்டது கேளார் | 86 | சூதர்கழகம் | 98 |
| உண்ணுங்கால் | 20 | தக்கணை | 3 |
| உதவிப்பயன் | 88 | தமக்குற்ற | 67 |
| உமிவு | 70 | தமக்கெண் | 39 |
| உயர்ந்ததின | 40 | தம்மேனி | 77 |
| உரற்களத்து | 99 | தலையிய நற்கருமம் | 92 |
| எச்சிலார்தீண்டார் | 5 | தலைக்கிட்ட | 90 |
| எச்சிலார் நோக்கார் | 6 | தலையுரைத்த | 12 |
| எச்சில் பலவும் | 7 | தன்னுடம்பு | 95 |
| எய்தாத | 89 | தீண்டா நாள் | 42 |
| எழுச்சிக்கண் | 58 | துடைப்பம் | 45 |

| பாட்டு. | இலக்கம். |
| --- | --- |
| துறந்தாரை | 63 |
| துன்பத்துள் | 79 |
| தெறியொடு | 53 |
| தெறுவாதும் | 80 |
| தேவர் | 10 |
| தொழுதாலும் | 97 |
| நகையொடு | 73 |
| நடைவரவு | 35 |
| நக்தெரும்பு | 96 |
| நன்றியறிதல் | 1 |
| நால்வகை | 8 |
| நாழிமணைமேல் | 44 |
| நாளந்தி | 9 |
| நிரல்படச் | 83 |
| நின்றக்கா | 74 |
| நீராடிக் | 18 |
| நீராடும் | 14 |
| நீருணிழற் புரிந்து | 13 |
| பகற்றெற்கு | 33 |
| படிறும் | 52 |
| பத்துத்திசையும் | 34 |
| பழியாரிழியார | 50 |
| பாரப்பார் | 64 |

| பாட்டு. | இலக்கம். |
| --- | --- |
| பாழ்மனையும் | 57 |
| பிறப்பு | 2 |
| பிறரொடு | 78 |
| பிறர்மனை | 37 |
| புழைக்கடை | 81 |
| புற்பைங்கூழ் | 32 |
| பெரியாருவப்பன | 68 |
| பெரியாரமனை | 72 |
| பொய்க்குறளை | 38 |
| மன்றதது | 93 |
| மின்ஞெளியும் | 51 |
| முதியவரை | 26 |
| முளிபுல்லும் | 56 |
| முறுவலினிதுரை | 54 |
| முனியார் | 69 |
| முனறுவ்வார் | 24 |
| மோட்டுடை | 91 |
| யாதொனறு | 60 |
| வண்ணமகளிர் | 82 |
| வானமுறை | 61 |
| விருந்தினர் | 21 |
| விரைநதுரையார் | 76 |
| வைகறை | 4 |

## OTHER PUBLICATIONS

| | | RS. | A. |
|---|---|---|---|
| 1. | Essay on Tamil ... ... ... | 1 | 0 |
| 2. | Essay on Kambar ... ... ... | 0 | 8 |
| 3. | Essay on Tiruvalluvar ... ... | 0 | 8 |
| 4. | Tamil Essays ... ... ... | 0 | 4 |
| 5. | Simple Essays in Tamil ... ... | 0 | 4 |
| 6. | Robinson Crusœ ... ... ... | 0 | 4 |
| 7. | Tamil Novelettes ... ... ... | 0 | 6 |
| 8. | Akbar ... ... ... ... | 0 | 10 |
| 9. | Kalingathuparani (a resumé in prose) | 0 | 8 |
| 10. | Kannakicharitram ... ... ... | 0 | 8 |
| 11. | A Manual of Tamil Grammar ... | 0 | 4 |
| 12. | Aranericharam ... ... ... | 0 | 4 |

**T. Chelvakesavaroya Mudaliar,**
*PERAMBUR,*
**MADRAS, N.**

## ஸ்ரீமாந். வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்

### பிரசுரங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மனம்போலவாழ்வு (இரண்டாம் பதிப்பு) ... | 0 | 8 | 0 |
| 2. | அகமேபுறம் (இரண்டாம் பதிப்பு)... | 0 | 8 | 0 |
| 3. | மெய்யறம் (அரும்பதவுரையுடன்)... | 0 | 8 | 0 |
| 4. | தமது பாடற்றிரட்டு (அரும்பத வுரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 5. | மெய்யறிவு - மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 6. | வள்ளியம்மை சரித்திரம் (அரும் பத வுரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 7. | வலிமைக்கு மார்க்கம் ... ... | 0 | 8 | 0 |
| 8. | இன்னிலை-பதினெண்கீழ்க்கணக்கி லொன்று (அச்சில்) ... | 0 | 8 | 0 |
| 9. | திருவள்ளுவர் திருக்குறள்-மணக் குடவருரை (அச்சில்) ... | 2 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் - இளம் பூரண ருரை (அச்சில்) ... ... | 6 | 0 | 0 |

இவை சென்னை, பிரம்பூரில் வசிக்கும் ஸ்ரீமாந், வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களிடம் கிடைக்கும்.

5300a
சென்னை-1